பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 28 | சனிக்கிழமை | 11.05.2024 | அதிர்வு 284

## தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுக்கொலை



காலி – அஹுங்கல்ல பகுதியில் நேற்று குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

06

# பொலிஸார் விரட்டிச் சென்ற நபர் மின்கம்பத்தில் மோதுண்டு சாவு!

## புன்னாலைக்கட்டுவனில் நேற்றிரவு பதற்றம்







(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் பொலிஸார் விரட்டிச் சென்ற நபர் ஒருவர் மின்கம்பத்தில் மோதுண்டு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றது. கிளிநொச்சி மின்சார சபையில்

06

# ஜனாதிபதித் தேர்தலுக்கு மொட்டுக் கட்சி தயாராம்



## வேட்பாளர் குறித்து இன்னமும் முடிவில்லை என்கிறார் பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் என்று கட்சியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனினும், இதுவரையில் வேட்பாளரைத் தெரிவு செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

06

# மொட்டுவின் வேட்பாளரே ஒன்பதாவது ஜனாதிபதி

## கட்சியின் செயலர் கூறுகின்றார்



“இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாகப் பதவி பிரமாணம் செய்யும் நபரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷக்களுடனே உள்ளார்கள்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

பத்தரமுல்லைப்

06



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு இது மங்கு சனிக் காலம் போலும். பிரச்சினைகள் மேல் பிரச்சினை. தொட்ட இடமெல்லாம் பிரச்சினை.

ஏற்கனவே சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து அவரைத் தள்ளி வைத்து விட்டது கொழும்பு மாவட்ட நீதிமன்றம். அவர் கொண்டு வந்த விஜயதாஸ ராஜபக்ஷவை கட்சியின் பதில் தலைவராக்க எடுத்த முயற்சியில் விஜயதாஸவுக்கும் தடை உத்தரவு; கட்சியில் அதுவரை மைத்திரியின் கட்டுப்பாட்டில் செயற்பட்டு வந்த பதில் பொதுச் செயலாளருக்கும் அதனால் தடை உத்தரவு என்று கட்சியே மைத்திரி தரப்பிலிருந்து முற்றாகக் கைநழுவி போகும் நிலைமை. மாற்றுத் தரப்பு ஏற்கனவே

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# சாதாரண தர பரீட்சையின் போது 'வாட்ஸ் அப்பில்' வினாத்தாள் பகிரப்பட்டமை தொடர்பில் விசாரணை



கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆங்கிலப் பரீட்சை வினாத்தாள் "வாட்ஸ் அப்" ஊடாகப் பகிரப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

ஆங்கிலப் பரீட்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், அந்த வினாத்தாள் "வாட்ஸ் அப்" ஊடாக பகிரப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் சிலர் மோசடியான முறையில் விடை எழுதும் நோக்கில் இவ்வாறு வினாத்தாளை பகிர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த செயற்பாட்டினூடாக ஆங்கிலப் பாட வினாத்தாளின் இரகசியத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படவில்லை யெனப் பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, சாதாரண தர பரீட்சையின் சிங்கள பாட வினாத்தாளில் குறைபாடு காணப்படுவதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ரூ.1,200 சம்பளம் அதிகரிப்பிற்குத்தான் பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம்



ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 1200 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம் என பெருந்தோட்ட நிறுவனங்களின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 1200 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

1200 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் அடங்கலாக 1380 ரூபா தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையான சம்பளப் பொதியாகக் கிடைக்கும்.

மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ கொழுந்திற்கு 60 ரூபாவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை எழுத்து மூலம்தொழில்அமைச்சர்மனுஷநாணயக்காரவிடம் கையளித்துள்ளோம்.

ஏற்கனவே, ஒரு கிலோ கொழுந்திற்கு 40 ரூபா வழங்கப்பட்டது. தற்போது மேலதிகமாக 20 ரூபாவை அதிகரித்து வழங்குவது 50 வீதம் அதிகரிப்பு ."– என்றார்.

# தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில்



தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்தச் சட்டம் 28 வருடங்களுக்கு பின்னர் திருத்தியமைக்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்புகளை வலுப்படுத்துவதற்காக, தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கான கோபுரங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகளை இதனூடாக மூன்றாம் தரப்பினருக்கு வழங்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை உரிய தொலைத்தொடர்பு நிறுவனங்களே தமக்கான தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணித்து வந்துள்ளன எனவும் அவற்றுக்குத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 50 வீத நிதியையும் உரிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் 50 வீத நிதியையும் வழங்குகின்றன எனவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்பு நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரித்தல் மற்றும் 4ஜி தொழில்நுட்பத்தை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தல் ஆகிய நோக்கங்களை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டமூலத்தினூடாக அடைய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





# சர்வதேச நிர்மாண கண்காட்சியை ஜனாதிபதி ரணில் பார்வையிட்டார்

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட “வீடமைப்பு மற்றும் சர்வதேச நிர்மாணக் கண்காட்சி – 2024” ஐ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்.

‘இலங்கையைக் கட்டியெழுப்புவோம்’ என்ற தொனிப் பொருளின் கீழ் இவ்வருட கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணத்துறை நிறுவனங்களின் 300 விற்பனை கூடங்கள் இந்தக் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், சீனாவில் உள்ள 30 முக்கிய நிறுவனங்களின் தயாரிப்புகளுடன் கூடிய விற்பனை கூடங்கள் இந்த கண்காட்சியில் முதல் முறையாக இணைந்துள்ளமையுடன், இலங்கை முப்படைகளின் நிர்மாணத் தொழில்நுட்பத்தைக் காட்சிப்படுத்தும் கூடங்களை உள்ளடக்கிய இக்கண்காட்சி, நாளை வரை நடைபெறவுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு விற்பனை கூடங்கள் மற்றும் ஆயுதப்படைகளின் கண்காட்சிக் கூடங்களை ஜனாதிபதி பார்வையிட்டார். கண்காட்சியின் ஏற்பாட்டாளர்களுடனும் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபையின் தலைவர் பட்டய கட்டிடக்கலை நிபுணர் ஜயந்த பெரேரா, பொதுச் செயலாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியியலாளருமான நிஷங்க என். விஜேரத்ன உள்ளிட்ட பலர் இதன் போது உடனிருந்தனர்.

















# மூன்று பில்லியன் டொலர் முதலீடுகளை 2024 இறுதிக்குள் கொண்டுவர முடியும்

## முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

“2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிதியமைச்சு வழங்கியுள்ள ஒரு பில்லியன் டொலர்கள் என்ற முதலீட்டு இலக்கை மூன்று மடங்குகளாக அதிகரித்து சுமார் 03 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வர முடியும்.”

– இவ்வாறு முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“முதலீடுகள் நாட்டிற்குள் வருவதற்கு, அரசியல் ஸ்திரத்தன்மை, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்த உறுதிப்பாடு இருக்க வேண்டும். அதற்கிணங்க, இந்நாட்டிற்கு முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. நாட்டில் முதலீட்டுச் சூழல் மேம்பட்டுள்ளது. 02 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையில் இருந்து, 200 சதவீதம் மாறியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரவில்லை. ஆனால் தற்போது முதலீட்டாளர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை புள்ளி விவங்களுடன் என்னால் முன்வைக்க முடியும். மேலும் நிதியமைச்சினால் வழங்கப்பட்ட இலக்குகளை தாண்டிச் செல்ல முடிந்துள்ளது. இவை அனைத்தும் ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் முன்னெடுத்த வேலைத் திட்டங்களினால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மட்டும் நிதி அமைச்சின் இலக்கை நிறைவு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, 2024ஆம் ஆண்டு இறுதிக்குள், நிதியமைச்சு எமக்கு வழங்கிய இலக்கை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதாவது இந்த வருடத்தில் 03 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வர முடியும் என நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன்.

2023 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு திட்டங்கள் இந்த வருடத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த முதலீடுகள் இந்த ஆண்டில் சேர்க்கப்படவில்லை. மேலும், இந்த ஆண்டு முதலீட்டு சபை பிரதிநிதிகளை நியமித்து வெளிநாடுகளில் முதலீடுகளை ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளன. வெளிநாடுகளில் உள்ள இலங்கை




வர்த்தகர்களை உள்ளடக்கிய Global Forum ஊடாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளின் மூலம் பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் இருந்து வெற்றிகரமான முடிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இதற்கு மேலதிகமாக, திருகோணமலை, மாங்குளம், பரந்தன், காங்கேசந்துறை பிரதேசங்களை அண்மித்த கைத்தொழில் பேட்டைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக காங்கேசந்துறையில் உள்ள தனியார் கைத்தொழில் பேட்டையில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடா வாழ் இலங்கையர்களை உள்ளடக்கிய பலம்வாய்ந்த குழு ஒன்று இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. 500 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக, சூரிய, காற்றாலை வலுசக்தி, பசுமை ஹைட்ரஜன் ஆகிய துறைகள் நாட்டின் முக்கிய முதலீடுகளாக மாறும். இந்த நாட்டின் கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்த பிறகு, இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

பல அரசியல்வாதிகள் கூறும் வகையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டியது இந்தப் பாதையில் என்றால், இந்தப் பாதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கி இருந்தால், அந்தப் பாதையில் செல்ல வேறு எவர் வேண்டும்? அவருடனேயே தொடர்ந்தும் இந்தப் பாதையில் செல்லலாம் என்றே நாம் கூறுகிறோம். ” – என்றார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்து:

# இடைக்கால கொடுப்பனவிற்கு காப்புறுதியாளர்கள் அனுமதி



எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்து தொடர்பில் இடைக்கால கொடுப்பனவிற்கு காப்புறுதியாளர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

1.3 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கொடுப்பனவை மேற்கொள்ள அவர்கள் இணங்கியுள்ளனர் என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பேரழிவு ஏற்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்திடமிருந்து இழப்பீடு கோரி இலங்கை அரசாங்கம் சிங்கப்பூர் சர்வதேச வணிக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ‘DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு’ நம் இளைஞர்களுக்குச் சிறந்த வாய்ப்பாகும்

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவிப்பு

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் DIGIECON-2023 திட்டத்துடன் இணைந்து நடத்தப்படும் DIGIECON உலகளாவிய முதலீட்டு உச்சி மாநாடு - 2024 (DIGIECON Global Investment Summit) என்பது இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பாகும்.”

– இவ்வாறு தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்கும் 'DIGIECON 2023' திட்டத்துடன் இணைந்தாக இலங்கை தொழில்நுட்ப அமைச்சினால் நடத்தப்படும் DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு குறித்து தெளிவுபடுத்தும் ஊடாக மாநாடு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“DIGIECON-2023” திட்டத்துடன் இணைந்ததாக நடைபெறவுள்ள DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு டிஜிட்டல் முதலீட்டு மாநாட்டை நடாத்துவதன் மூலம் இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள DIGIECON திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இதன் மூலம் தகவல் தொழிநுட்பத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் தமது துறையில் முன்னேற சிறந்த வாய்ப்பு உள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் இலங்கையை சர்வதேச ரீதியில் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம். இதன்படி சர்வதேச சமூகம் இந்நாட்டில் முதலீடு செய்ய வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டங்கள் மூலம் நமது நாட்டில் உள்ள விசேட திறமை கொண்ட இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்து பணவீக்கம் குறைந்துள்ளது. இதன்படி, இந்நாட்டில் முதலீடுகளுக்கு சிறந்த பின்னணி உருவாகியுள்ளது. எனவே, இந்த மாநாட்டின் மூலம் பல வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும். இது நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும். – என்றார்.

இந்த நிகழ்வில், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்ம ஸ்ரீகுமாரதுங்க, MasterCard முகாமையாளர் (இலங்கை மற்றும் மாலைதீவு) சந்துன் ஹபுகொட, FITIS நிறுவனத் தலைவர் இந்திக்க டி சொய்சா, SLASSCOM நிறுவனத்தின் பிரதித் தலைவர் நிஷான் மெண்டிஸ், BCS நிறுவனத்தின் தலைவர் அலோன்சோ டோல் CSSL நிறுவனத்தின் தலைவர் கலாநிதி அஜந்த அத்துகோரள உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






# யால பூங்காவில் பூச்சிகளைப் பிடித்து கடத்த முயன்ற வெளிநாட்டவர்கள் ஜைது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யால தேசிய வனாந்தர பூங்காவிலிருந்து நூற்றுக் கணக்காவ வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் உள்ளூர் பூச்சிகளைப் பிடித்து அவற்றைக் கொன்று, இரசாயனப்பதார்த்தம் இடப்பட்ட போத்தலில் சூட்சுமமான முறையில் போத்தலில் அடைத்து, வெளிநாட்டுக்குக் கடத்த முயன்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்த தகப்பனையும் மகனையும் கடகமுவ வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

யால தேசிய பூங்கா பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்ட போது போத்தல்களில் அடைக்கப்பட்ட பூச்சிகள்,இரசாயனப் பதார்தங்கள், பூச்சிகளைப் பிடிக்கும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன பொறுப்பதிகாரி மனோஜ்



வித்தியாரெட்ண தெரிவித்துள்ளார்.

வைத்தியரான 58வயதுடைய தந்தையும், பொறியியல் பீட மாணவனான 28 வயதுடைய மகனும் திஸ்ஸமகராம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்சியின் தலைமையகத்துக்குள் புகுந்து, அதைக் கைப்பற்றி, தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. வரும் ஜூன் இரண்டாம் திகதி மாற்றுத் தரப்பு, கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி, மைத்திரி - விஜயதாஸ கூட்டின் பிடியை முற்றாகத் தகர்த்து, கட்சிக்கு வெளியே அவர்களை அனுப்பி விடும் என்று நம்பப்படுகிறது.

மறுபுறத்தில் தன்னுடைய ஜனாதிபதிப் பதவி காலத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்தியது இந்தியா தான் என்ற சாரப்பட இப்போது கருத்து கூறப்போன மைத்திரி, அது தொடர்பாகவும் புதிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கின்றார் என்று தெரிகிறது.

இந்த விடயத்தை ஒட்டி அவர் வழங்கிய இரண்டு வாக்குமூலங்களிலும், சி.சி.டி.வி. காட்சியிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்று குற்றப்புலனாய்வு பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். அந்த முரண்பாடுகள் யாவை என்பது விவரமாக வெளிப்படுத்தப்படாவிட்டாலும் அவற்றை ஊகிக்க முடிவதாக தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி இந்தியத் தூதரின் 'இந்திய ஹவுஸ்' இல்லத்தில் நடந்த இந்தியக் குடியரசு தின நிகழ்வின் போது தன்னைச் சந்தித்த இந்திய அதிகாரி ஒருவர், மேற்படி ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை செய்வித்தது இந்தியாவே என்று தன்னிடம் தெரிவித்தாரென இந்த வாக்குமூலங்களில் மைத்திரி கூறியுள்ளார் என்று அறியப்படுகின்றது.

இதை அடுத்து இந்த நிகழ்வுக்கு மைத்திரிபால சிறிசேன வந்தமையிலிருந்து, நிகழ்ச்சியில் இருந்து அவர் வெளியேறியமை வரையான சி.சி.டி.வி. கமரா காட்சிகளை இந்தியத் தூதரக உதவியுடன் குற்றப்புலனாய்வுத் துறையினர் பெற்றிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அந்தக் காட்சிகள், மைத்திரிபால சிறிசேன அது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு வாக்குமூலமாக 'அளந்த கதை'யுடன் ஒத்துப் போகவில்லை என்று தெரிகிறது.

அதையே முரண்பாடுகள் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மாளிகாகந்தை நீதிவானிடம் தெரிவித்திருக்கின்றனர் எனவும் கருதப்படுகிறது.

இந்த வாக்குமூலம் அளித்த விடயத்தில் கிரிமினல் குற்றப் பொறுப்புள்ள தவறு எதனையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இழைத்தாரா என்று ஆராய்ந்து, அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து,அது பற்றிய முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கும்படி மன்று இப்போது குற்றப் புலனாய்வுத் துறையினருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

போகின்ற போக்கில் பொலிஸாரின் காப்பு மைத்திரியாருக்கு மாட்டப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை...!

## தென்னிலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் 54 வயதுடைய நபர் படுகாயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பல தோட்டாக்கள் அவரது வயிற்றைத் தாக்கியுள்ளன என்று தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரிய வெங்காய விலையில் வீழ்ச்சி



இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் விலை தற்போது குறைவடைந்துள்ளதாக விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்தமையினால் தொடர்ந்தும் நாட்டில் பெரிய வெங்காயத்தின் விலை 700 ரூபாய் முதல் 800 ரூபாவாக பதிவாகியிருந்தது.

இதனை தொடர்ந்து, அந்தத் தடையை இந்தியா நீக்கியதன் பின்னர் பெரிய வெங்காயத்துக்கான விலை குறைக்கப்பட்டிருந்தது.

தற்போது, பெரிய வெங்காயம் கிலோவொன்று 200 முதல் 210 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸார் விரட்டிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பணியாற்றும் உரும்பிராயைச் சேர்ந்த செல்வநாயகம் பிரதீபன் என்ற 41 வயதான நபரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பொதுமக்கள் கூடியதால் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

பலாலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை மறித்துள்ளனர். இதன்போது அந்த நபர் தொடர்ந்து பயணிக்கவே விரட்டிச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்படி நபர் பயணித்த மோட்டார் சைக்கிளை உதைந்து வீழ்த்தியதில் அந்த நபர் மின்கம்பத்தில் மோதி உயிரிழந்தார் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தார்களா என்பது தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

## மொட்டுவின் வேட்பாளரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்ஜனாதிபதித்தேர்தல்செயற்பாட்டு நிலையத்தை நேற்று திறந்து வைத்த தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தேர்தலுக்கு அச்சமடைய வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்துள்ளது.

தேர்தல் செயற்பாட்டு நிலையத்தை நாங்கள் திறந்து வைத்துள்ளோம். ராஜபக்ஷக்கள் மக்கள் மத்தியில் செல்வதற்கு அச்சமடைய வேண்டிய தேவையில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பலர் கோரிக்கை விடுத்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றார்கள்.

ஆனால், பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷக்கள் பக்கமே உள்ளார்கள். நாட்டின் ஒருமைப்பாடு, தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தியே பொதுஜன பெரமுன செயற்படுகின்றது என்பதைப் பெரும்பான்மையின மக்கள் அறிவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் எதுவும் கிடையாது. அரசியல் கொள்கையில் மாத்திரமே மாறுப்பட்ட தன்மை காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அவரிடம் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். அத்துடன் கட்சி மட்டத்திலும் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்யும் நபரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் இறுதித் தருணத்தில் எம்முடன் ஒன்றிணைவார்கள்." - என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்சியின் தலைமைத்துவம் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தீர்மானிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டுக்காக யாருடனும் இணைந்து செயற்படத் தயார் என்றும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு நிலையம் பத்தரமுல்லை - ஜயந்திபுர மாவத்தையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் தம்மிக்க பெரேரா உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு நிலையங்கள் தொகுதி மட்டத்திலும் திறக்கப்படவுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு விரிவான பிரசாரப் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுஜன பெரமுன மேலும் குறிப்பிட்டுள்ளது.


INDSRI FERRY
யாழ்
↕
நாகை
13/05/24
இல் இருந்து தினசரி
"சிவகங்கை" பயணிகள் கப்பல்
சேவை
துட்டு இருந்தால் வாங்கலாம் பட்டு
• சேலை துணிமணிகள் வாங்க
• சமயச் சுற்றுலாக்கள்
• அழகிய கடற்கரைகள்
மேலும் அனுபவிக்க ...
ரூ 15,000 *
இல் இருந்து
www.sailindsri.com
பதிவுகளுக்கு
Google play
Download on the App Store
*ஒரு வழிக் கட்டணம் (வரிகள் இன்றி)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதையைக் கட்டுப்படுத்த....!

கடந்த வருடத்தை விட இந்த வருட தமிழ், சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மதுப் பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலோட்டமான ஆய்வு ஒன்றின் பெறுபேறு இத்தகைய கருத்து நிலையைத் தந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த ஆய்வின் முடிவு எவ்வளவு தூரம் தர்க்க ரீதியானது என்பது கேள்விக்குறியே.

ஆயினும், இலங்கையில் மதுபானப்பாவனை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவது வரவேற்கத்தக்க சமாச்சாரம்தான்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட ஆய்வொன்றின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இந்த ஆய்வுக்காக நாடளாவிய ரீதியில் 415 பேரிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன எனவும், அவர்களில் 192 பெண்களும் அடங்குவர் எனவும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி இந்த ஆண்டு புத்தாண்டுக் கொண்டாட்டக் காலங்களில் மதுபானப் பாவனை குறைவடைந்துள்ளதாக 64.4 சதவீதமானோர் தெரிவித்துள்ளனர்.

கொண்டாட்டக் காலங்களில் மதுபானப் பாவனை குறைவடைந்தமைக்கான காரணம் மதுபானத்தின் விலை அதிகரிப்பே என ஆய்வில் பங்கேற்ற 71.5 சதவீதமானோர் தகவல் வழங்கியுள்ளனர் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதில் 26 சதவீதத்தினர் இந்த காலகட்டத்தில் மதுபானப் பாவனையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை எனவும், 10 சதவீதத்தினர் மதுசாரப் பாவனை அதிகரித்திருந்ததாகவும் தகவல் வழங்கியுள்ளனர்.

ஆக, வெறுமனே நானூறு, ஐந்நூறு பேரின் கருத்தை மட்டும் வைத்து கடந்த வருடத்தை விட இந்த வருடம் தமிழ், சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மது பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதான முடிவுக்கு வருவது உசிதமானதா என்ற கேள்வி எழுகிறது.

பொதுவாகவே விலையேற்றங்கள் ஏற்படும் போது, 'பொக்கற்' கடிப்பதால் பாவனையை இயன்றவரை பல்லைக் கடித்துக் கொண்டு குறைப்பதும், அப்படி குறைத்து விட்டோம் என்று பீற்றிக் கொள்வதும் 'பெருங்குடி' மக்களின் வழமையான பண்பியல்புதான். அந்தக் கருத்தியலை மட்டும் வைத்து ஓர் ஆய்வு முடிவுக்கு வருவது பொருத்தமோ தெரியவில்லை. ஏனெனில் இப்படிக் கருத்துக் கூறும் வகையினரில் எத்தனை சத வீதத்தினர் 'விடிந்தால் போச்சு' என்ற மாறுபாடான கருத்துகளைக் கூறக் கூடியவர்கள் அல்லது அத்தகைய கருத்துக் கூறுபவர்களின் உரைகளை உள்வாங்கியவர்கள் என்பதையும் அவர்களின் கருத்துத் தொகுப்பாக்கத்தின் போது விசாரித்துக் கணக்கெடுப்பதும் முக்கியமாகும்.

பொதுமக்கள், குடும்பத்தவர்கள், பாவனையாளர்கள், 'குடி'மக்கள் போன்றோரின் கருத்துகளைத் திரட்டி முடிவுக்கு வருவதிலும் பார்க்க, கடந்த வருடத்தை விட இந்த வருடத்தமிழ், சிங்களப்புத்தாண்டுக்கொண்டாட்ட காலத்தில் விற்பனையான மது வகைகளின் அளவைக் கவனத்தில் எடுப்பது சிலசமயம் இப்போது கிட்டிய ஆய்வு முடிவின் உண்மைத் தன்மையை மேலும்ருசுப்படுத்த உதவக் கூடும்.

எது, எப்படியாயினுன் மதுபானப் பாவனை குறைந்தமையானது சமூகத்தில் சிறந்த போக்கை எடுத்துக்காட்டுவதாகவும், சுகாதாரத்துறையின் அதிக செலவினத்தை தவிர்க்க முடியும் எனவும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயினும், இந்த நல்லொழுக்கத்தை - நற்பண்பியல்பை - மதுபான வகைகளின் விலையேற்றத்தின் மூலம் ஈட்டுவது என்பதும், நிதி நெருக்குவாரம் மூலம் 'பெருங்குடி' மக்களைக் கட்டுப்படுத்துவது என்பதும் நீண்டு, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு அல்ல என்பதையும், அத்தகைய நெருக்குவாரங்கள், கட்டுப்பாடுகள் போன்றவை கசிப்புப் போன்ற முறையற்ற வழிமுறைகளை நாடவும், அத்தகைய மார்க்கங்களை இயல்பானவையாக்கித் தூண்டவும் கூட வழி செய்து விடும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

மது உட்பட்ட போதைப்பொருள் பாவனையை சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கு ஒவ்வொரு பிரஜையின் அடிமனதிலும் நல்லொழுக்கத்தை, நற்பண்பியல்பை, மனிதநேயத்தை, போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பேரழிவுச் சீர்கேட்டின் அவலத்தை நாம் ஆழமாக விதைக்க வேண்டும். அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதுவே இப்பிரச்சினைக்கு நிரந்தரமான - நிலையான - நீடித்த - தரும்.

# 'விரைவில் நாம் சந்திப்போம்'; மாணவர்களுக்கு விஜய் தகவல்

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், விரைவில் மாணவர்களை சந்திக்க உள்ளேன் என அறிவித்துள்ளார்.

இது குறித்து அக்கட்சியின் சமூக வலைதள பக்கங்களில் பதிவு வெளியிடப்பட்ட பதிவில்,

"தமிழ்நாடு, புதுச்சேரியில் அண்மையில் நடைபெற்ற 12 மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுகள். மற்றவர்கள் தன்னம்பிக்கையுடன் மீண்டும் முயன்று, வெற்றி பெற வாழ்த்துகள். விரைவில் நாம் சந்திப்போம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜுனில் தமிழகத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தொகுதி வாரியாக சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களைப்பாராட்டு, ஊக்கத்தொகை, பரிசு வழங்கும் விழாவை சென்னை - நீலாங்கரை பகுதியில் விஜய் நடத்தி இருந்தார்.

இந்த நிகழ்வில் கல்வி, அரசியல் விழிப்புணர்வு சார்ந்து அவர் பேசியிருந்தார். அதன் பிறகு தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார். மக்களவைத் தேர்தலில் யாருக்கும் ஆதரவு இல்லை என்றும், 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தல்தான் ஒரே இலக்கு எனவும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்திருந்தார்.

மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை



ஜுன் 4 ஆம் திகதி நடைபெறுகிறது. எனவே, வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகு தவெக கட்சி கொடி தேர்வு, நிர்வாகிகள் நியமனம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை நடிகர் விஜய் மேற்கொள்ள இருப்பதாக தெரிகிறது.

குறிப்பாக, நடிகர் விஜய் கட்சி தொடங்கிய நாள் முதல், கட்சியின் மாநாடு மதுரையில் நடைபெற இருப்பதாக செய்திகள் வெளியாகின. அந்த வகையில், முன்பு வெளிவந்த தகவலின் படியே மதுரையில் நடிகர் விஜய் தனது கட்சியின் முதல் அரசியல் மாநாட்டை தொடங்க திட்டமிட்டுள்ளதாக தற்போதும் தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் அவர் விரைவில் மாணவர்களை சந்திக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

# நாய்கள் தொடர்பாக விதிக்கப்பட்ட தடை உத்தரவு திரும்பப் பெறப்பட்டது



தமிழ்நாட்டில் 23 வகை நாய் இனங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை தமிழக அரசு தற்போது திரும்பப் பெற்றுள்ளது.

சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சி பூங்காவில் 5 வயது சிறுமியை ரொட்வீலர் இன வகையைச் சார்ந்த வளர்ப்பு நாய்கள் தாக்கியதில் படுகாயம் அடைந்த நிலையில், சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து மத்திய அரசின் அறிவிப்பாணையை மையப்படுத்தி, தமிழகத்தில் 23 வகை வெளிநாட்டு நாய்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத்துறை உத்தரவிட்டது.

பொது இடங்களுக்கு கூட்டிச்செல்லும்போது, நாய்களுக்கு கட்டாயம் சங்கிலி, முககவசம் அணிவிக்க வேண்டும், நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து இனப்பெருக்கம் செய்யாதவாறு பார்த்து கொள்ளவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் இதன்போது விதிக்கப்பட்டன.


இந்த நிலையில் தமிழ்நாட்டில் 23 வகை நாய் இனங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை தமிழ்நாடு அரசு தற்போது திரும்ப பெற்றுள்ளது.

மத்திய அரசின் அறிவிப்பாணைக்கு நீதிமன்ற தடை உத்தரவு உள்ளதால் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை பிறப்பித்த உத்தரவை திரும்ப பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விஜயகாந்துக்கு பத்ம பூஷண் விருது







2024 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் இந்தியாவின் குடியரசுத் தினத்தன்று அறிவிக்கப்பட்டன.

அதில் மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகாந்துக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டது.

இந்தியாவின் டில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் பத்ம விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் விஜயகாந்த் சார்பில் கலந்து கொண்ட பிரேமலதா விஜயகாந்த், இந்தியாவின் குடியரசுத் தலைவரிடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்ட நிலையில், அந்தப் புகைப் படங்கள் மற்றும் காணொலிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# கடுமையான சூரிய புயல் உலகைத் தாக்கும் அபாயம்!

கடுமையான சூரிய புயல் ஒன்று உலகை தாக்கும் என தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் என்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்றிரவு வரை கலிபோர்னியா – தெற்கு அலபாமா வரை இந்த காந்த புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்கா அரசின் கீழ் இயங்கும், தேசிய கடல் மற்றும் வளிமண்டல ஆய்வகம், கடுமையான சூரிய காந்த புயலுக்கான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பூமியின் வட அரைகோளத்தில் காந்த புயல் காரணமாக தகவல் தொடர்பில் பாதிப்பு ஏற்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, ஜி.பி.எஸ், ரேடியோ அலைவரிசை, தகவல் தொடர்பு, மின் அமைப்பு போன்றவையும் இதனால் பாதிக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 20 ஆண்டுகளுக்கு பின் ஏற்படும் வலுவான சூரிய காந்த புயலின் தீவிரத்தால் செயற்கைகோள்களின் செயற்பாடுகளும் முடங்க வாய்ப்புள்ளதாக, அமெரிக்க ஆய்வகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மீண்டும் ரஷ்யாவின் பிரதமராக மைக்கேல் மிஷுஸ்டின் பதவியேற்பு





ரஷ்யாவின் பிரதமராக நேற்று மைக்கேல் மிஷுஸ்டின் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ரஷ்ய சட்டத்திற்கு இணங்க, கடந்த நான்கு ஆண்டுகளாக பணிபுரிந்த 58 வயதான மிஷுஸ்டின், செவ்வாயன்று அமைச்சரவையில் தனது இராஜினாமாவை, சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து அவர் அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினினால் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மிஷுஸ்டினின் மறுநியமனம் அரசியல் அரங்கில் பெரும் பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலில் வெள்ளப் பெருக்கில் சிக்கி இதுவரையில் 107 பேர் உயிரிழப்பு











பிரேசிலில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 107ஆக அதிகரித்துள்ளது.

வெள்ளப் பெருக்கில் 1.7 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், 754 பேர் காயமடைந்துள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தமது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பிரேசிலில் தற்போது கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டை ஜூன் 2ஆம் திகதி கொழும்பில் நடத்தத் தீர்மானம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டை அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் மாநாடு நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்திற்காக பல பிரேரணைகள் இதன்போது நிறைவேற்றப்பட உள்ளன என கட்சியின் பிரசார செயலாளர் திசர குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் மாவட்ட மட்டத்தில் கொழும்பிற்கு அழைக்கப்படுகின்றனர்.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காகவே இவர்கள் கொழும்பிற்கு அழைக்கப்படுகின்றனர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியில் கடந்த காலங்களில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் நிர்வாக சபை கூட்டத்தின் போது, மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கட்சியின் பதில் தவிசாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை மாவட்ட மட்டத்தில் கொழும்பிற்கு அழைத்து, அவர்களின் சிக்கல்களை நிவர்த்திப்பதோடு, கட்சி என்ற ரீதியில் ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்ப்பதாகவும் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



# சிறுபோக உரக் கொள்வனவுக்காக விவசாயிகளுக்கு ரூ.211 மில்லியன்!

## அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி விடுவிப்பு

சிறுபோகத்திற்கான உர கொள்வனவிற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு 211 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட பல மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்காக இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடம் 60 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

உர மானியத்திற்காக 7 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

உரங்களை கொள்வனவு செய்வதற்காக ஹெக்டேருக்கு 15,000 ரூபா வழங்கப்படும் எனவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது.



# இந்தியத் தூதுவர் – சிறி எம்.பி. கொழும்பில் சந்தித்துப் பேச்சு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜாவை கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தனது எக்ஸ் பக்கத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்கால அரசியல் நிலைவரம், வடக்கு, கிழக்கு அடங்கலாக இலங்கையில் இந்தியா முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்களை மையப்படுத்திய விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்திய மக்களுக்காக, இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இதன்போது வலியுறுத்தியுள்ளார் என இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் எக்ஸ் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இங்கு எவரும் ஆட்சியமைக்கவே முடியாது!

## இப்படி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சொல்கின்றார்



“அறிவார்ந்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்களிக்க மாட்டார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் உண்மை முகம் தற்போது அவர்களின் பேச்சிலேயே வெளிப்படுகின்றது. ராஜபக்ஷக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எவரும் ஆட்சியமைக்க முடியாது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பத்தரமுல்லைப் பகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு நிலையத்தை நேற்று திறந்து வைத்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:–

“ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். எமது வேட்பாளர் யார் என்பதைக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவார். சிறந்த வேட்பாளரைக் களமிறக்குவோம் என்ற உறுதியை நாட்டு மக்களுக்கு வழங்க முடியும்.

மக்கள் விடுதலை முன்னணியினரின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க என்பதைத் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படுவதற்கு முன்னரே அவர்கள் அறிவித்து விட்டார்கள்.

முன்னறிவிப்புக்களை விடுப்பதால் மாத்திரம் தேர்தலில் வெற்றி பெற முடியாது. அறிவார்ந்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணிக்க வாக்களிக்கமாட்டார்கள்.

வன்முறையான அரசியல் கலாசாரத்தில் இருந்து விடுப்பட்டு, ஜனநாயக அரசியலுக்குப் பிரவேசித்துள்ளோம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிடுகின்றார்கள்.

ஆனால், இவர்களின் உண்மை முகம் அவர்களின் பேச்சிலேயே வெளிப்படுகின்றது. அழிப்பதும், தீ வைப்பதும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கொள்கையாகும்.

2022ஆம் ஆண்டு சம்பவத்தைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பலவீனமடைந்து விட்டது என எதிர்த்தரப்பினர் கருதுகின்றார்கள். அரசியல் களத்தில் பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. ராஜபக்ஷக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எவரும் ஆட்சியமைக்க முடியாது.” – என்றார்.

# பரீட்சை இடைவேளையில் மாணவர்கள் அடிதடி ரகளை

## வவுனியாவில் நேற்றுச் சம்பவம்









(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப்பகுதியில் இருபாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கடுமையாக மோதிக்கொண்டனர்.

இந்தச் சம்பவம் வவுனியா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிலையத்திற்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:–

நேற்று பரீட்சை நிலையத்தில் க.பொ.த. சாதாரண தரஒ பரீட்சை இடம்பெற்றது. இந்நிலையில் அங்கு பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பாடத்தின் ஒருபகுதி நிறைவுற்றதுடன் நீண்ட நேரம் இடைவேளை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பரீட்சை மண்டபத்திற்கு வெளியில் ஒன்றுகூடிய இரு பாடசாலைகளை சேர்ந்த ஆண் மாணவர்கள் தங்களுக்குள் கடுமையாக மோதிக்கொண்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் சற்றுநேரம் குழப்பம் நீடித்தது. போக்குவரத்தும் தடைப்பட்டது.

இதனையடுத்து வீதியால் செல்பவர்கள் அங்கு ஒன்றுகூடியமையால் அந்த மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## வவுனியாவில் பரீட்சை நிலையம் ஒன்றில்

# விடைத்தாளை உரிய நேரத்திற்கு முன்பாகவே வாங்கிய மேற்பார்வையாளர் இடை நிறுத்தம்!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பாடசாலை ஒன்றில் பரீட்சை நேரம் முடிவடைவற்கு முன்னதாக மாணவர்களிடம் இருந்து விடைத்தாள்களை பெற்றுக் கொண்டமை தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் க.பொத.சாதரணதரப் பரீட்சையின் முதல் நாள் சமய பாட பரீட்சையின் போது பரீட்சை நிறைவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை நிலையம் ஒன்றில் உள்ள மாணவர்கள் சிலரிடம் விடைத்தாள்கள் பெறப்பட்டன என வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வலயக் கல்விப் பணிமனை அந்தப் பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளராக கடமையாற்றிய வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோகர் ஒருவரை இடைநிறுத்தியுள்ளதுடன், அங்கு அச்சமயத்தில் உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவரை மேற்பார்வையாளராக நியமித்துள்ளது. அவரது இடதுக்கி புதிதாக உதவி மேற்பார்வையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# வவுனியாவில் வெதுப்பகக் கழிவுநீரை சீரற்ற முறையில் வீதிக்குச் செல்ல விட்டவருக்கு எதிராக நடவடிக்கை!



(கே.வசந்தன்)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உணவகத்துடன் கூடிய வெதுப்பகம் ஒன்றின் கழிவு நீரை சீரற்ற வகையில் வீதிக்கு வெளியேற்றிய உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுகப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, ரயில் நிலைய வீதி, வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுடன் கூடிய வெதுப்பகத்தின் கழிவு நீரானது தாங்கி ஒன்றிற்கு சென்று அங்கிருந்து முறையான ஒழுங்கமைப்பு இன்றி வாய்கால் ஊடாக வீதிக்கு வந்துள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக வந்த நிலையில் அப் பகுதியில் துர்நாற்றம் வீசியது. அருகில் வீதியோரமாக மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களும் அசௌகரியங்களைத் தந்தது.

இதனையடுத்து மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் பல தடவை வெதுப்பக கழிவு நீரை வீதிக்கு விட வேண்டாம் எனக் கூறியும் அவர்கள் கவனம் செலுத்தாமையால் ஆத்திரமடைந்த மரக்கறி வியாபார நிலைய உரிமையாளர் அந்தக் கழிவு நீரை அள்ளி வெதுப்பகம் முன்பாக ஊற்றியுள்ளமெயுடன், இது தொடர்பில் வவுனியா நகரசபை சுகாதார பரிசோதகர்களுக்கும் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த சுகாதாரப் பரிசோதகர்கள் வெதுப்பகத்தின் கழிவு நீர் முகாமைத்துவத்தை பார்வையிட்டனர். அவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை வழங்கி அந்தக் கழிவு நீர் முகாமைத்துவத்தைச் சீர் செய்து விட்டு வெதுப்பகத்தை திறக்குமாறு கூறி அதனைப் பூட்டினர்.

இதன்பின்னர், அந்தக் கழிவு நீர் வெளியேற்றும் செயன்முறை சீர் செய்யப்பட்டதுடன், சுகாதார பரிசோதகர்களின் அனுமதியுடன் வெதுப்பகம் மீளவும் திறக்கப்பட்டது.




**உரலார் கேள்வி :- 'ஐ.பி.சி. சனலில்' கந்தையா பாஸ்கரன் அவர்களின் பேட்டியைக் கேட்டீர்களா?**

**உலக்கையார் பதில் :-** கேட்டேன்! கேட்டபோது எழுந்த சில எண்ணக்குறிப்புகள் கீழே.......

- அவரது நிதானமாகப் பதிலளிக்கும் முறை, இன வளர்ச்சி பற்றிய ஆழமான சிந்தனை, பதில்களில் காணப்பட்ட துணிவு என்பவை ஈர்த்தன.
- தனது ஊடகத்திலேயே, தன் பேட்டி வருவதை அவர் தவிர்த்திருக்கலாம். தொடுக்கப்பட்ட வினாக்கள் ஒத்திகை பார்க்கப்பட்ட நிகழ்ச்சியோ? என எண்ணவைத்தன.
- பேட்டியாளர் மறந்தவற்றை, பேட்டியெடுத்தவர் கேள்விகள் மூலம் எடுத்துக் கொடுத்ததில் தெரிந்த எஜமான விசுவாசம், ரசிக்கும் படியாக இல்லை.



- பேட்டியாளர் தன் பதில்களில் குறிப்பால் சிலரை உணர்த்த முயல, தான் அப்பெயர்களை வெளிப்படையாகச் சொல்லி, அவரைச் சொல்கிறீர்களா? இவரைச் சொல்கிறீர்களா? எனக் குழந்தைத்தனமாய்க் கேட்டு, பேட்டியாளரின் குறிப்பைப் பகிரங்கப்படுத்த முயன்றதில், பேட்டியெடுத்தவரின் முதிர்ச்சியின்மை தெரிந்தது.
- பல இடங்களில், பேட்டியாளர் சொல்லி முடித்த வசனத்திலிருந்தே தனது அடுத்த கேள்வியை 'அந்தாதி' பாணியில் ஆரம்பித்த, கேள்வி தொடுத்தவரின் பாணி சலிப்புத் தரும் புதுமை.
- 'புலம்பெயர்ந்தவர்களால்தான் ஆயுதப் போராட்டம் நிகழ்ந்தது' என்ற பேட்டியாளரின் கருத்தை ஏற்க முடியவில்லை. புலம்பெயர்ந்தவர்கள் செய்த பொருளுதவிகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் ஒரு போராளியின் உயிர்த்தியாகத்திற்கு முன்னால் அவையெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லையென்றுதான் தோன்றுகிறது.
- 'தேர்தல் செலவுக்கும், பிறதேவைகளுக்கும் புலம்பெயர்ந்தவர்கள் உதவ வரவேண்டும், அரசியலில் மட்டும் தலையிடக் கூடாதா?' என்ற பேட்டியாளரின் கேள்வியில் தொனித்த, பொருளை முன்வைத்துத் தொடுக்கப்பட்ட உரிமைக் கோரல் ரசிக்கும் படியாய் இல்லை.
- 'இது என் நாடு. இது என் மக்கள். அதனால் இங்கு அரசியலில் நுழையும் அதிகாரம் எமக்கும் உண்டு' எனும் பதில் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ எனத் தோன்றியது.
- 'தற்போதைய அரசியல்வாதிகள் தமது மற்றைய தொழில்களை விட்டு விட்டு, முழுமையாக அரசியலுக்கு வரவேண்டும்' என விடுத்த கோரிக்கை, 'பூமராங்' ஆகத் தன்னையே தாக்கும் என்பதை அறியாது பேசிய முறையில் பேட்டியாளர் தவறிழைத்தார்.
- 'நீங்கள் சொன்னதின்படி, அரசியலிற்குள் நீங்கள் வருவதானால், வெளிநாட்டில் உள்ள உங்களது வியாபார முதலீடுகள் அனைத்தையும் மூடிவிட்டுத்தான் வருவீர்களா?' என்ற கேள்விக்குப் பதிலுரைக்கும் சிரமத்தை, தனது நிறுவனத் தலைவருக்கு கொடுக்காமல், பேட்டி எடுத்தவர் காட்டிய விசுவாசத்தில் நேர்மை இருக்கவில்லை.
- 'புலம்பெயர்ந்த வர்த்தகர்கள் இங்கு அரசியலுக்குள் தலையிட வராதீர்கள்' என்ற சுமந்திரனின் கருத்து பேட்டியாளரைக் கடுமையாகக் காயப்படுத்தியிருந்தது தெரிந்தது.
- கிட்டத்தட்ட சுமந்திரனை ஓர் இனத்துரோகி போலக் காட்டமுயன்ற அவரது பதில்களில் நிதானத்தைக் கடந்த கோபமே பெரிதும் வெளிப்பட்டது.
- 'அடுத்த தேர்தலில் சுமந்திரன் தோற்கடிக்கப்படுவார்' என்றாற்போல் அவர் பேசியதில், ஓர் ஊடகத்தை வைத்து மற்றவர்களை மிரட்டும் தோரணை வெளிப்பட்டதாகத் தோன்றியது.
- தமிழரசுக்கட்சியின் மற்றைய உறுப்பினர்கள், சுமந்திரனின் கருத்தைக் கண்டிக்காமல் விட்டது பற்றிய தனது மனக்கசப்பை வெளியிட்டதோடு, அவர் நிறுத்தியிருக்கலாம். அதைச் செய்யாமல் விட்டுவிட்டு இனி எங்களிடம் எப்படி உதவிகேட்டு வருவீர்கள்? என்று கேட்ட கேள்வி மூலம், அவர் விடுத்த எச்சரிக்கையில், இனி ஈழத்து அரசியலைப் பணந்தான் வழிநடத்தப்

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

போகிறதோ?என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

- இலங்கை அரசியல்வாதிகளுடன் தனக்குள்ள தொடர்பைப் பகிரங்கப்படுத்தியதில் வெளிப்பட்டது நேர்மையா? முன்னெச்சரிக்கையா? எனும் கேள்வி எழவே செய்தது.
- ஈழத்து அரசியலைச் செம்மை செய்ய விரும்பும் அவர்(?) தற்போது இருக்கின்ற ஆற்றல்மிக்க தலைவர்களுள் ஒருவரான சுமந்திரனை, முற்றாகப் புறந்தள்ளிவிட நினைப்பதன் பொருத்தப்பாடு குழப்பத்தைத் தந்தது.
- 'தென்னிலங்கையில் நடந்ததுபோல இங்கும் ஒரு அரசியற்புரட்சி வெடிக்க வேண்டும்' என்கிறார் பேட்டியாளர். அங்கு வெடித்த புரட்சியால், வீழ்யிருந்த இலங்கையைக் காப்பாற்ற, புத்திசாலியான ஒரு ரணில்தான் தேவைப்பட்டார். நம்மினத்துக்குள்ளும் அப்படி ஒரு அரசியல்புரட்சி வெடிக்குமானால், அதனை நெறிப்படுத்தக்கூடிய புத்திசாலித் தலைவர்களை, தனது தனிப்பட்ட கோபத்தால் நிராகரிப்பது பொருத்தமாகுமா? என்ற கேள்வி பிறந்தது.

சுருங்கச் சொல்லப் போனால் தெளிவான குழப்பமுள்ள, அல்லது குழப்பம் உள்ள தெளிவான பேட்டி என இப் பேட்டிக்குத் தலைப்பிடலாம்.

**சல்லடையார் சலிப்பு :- 'சிறப்பு'**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- தமிழர்களின் ஒருமித்த உணர்வைக் காட்டவென, ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தச் சில தலைவர்கள் முயல்கிறார்களே?அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** முடிந்தால் கட்சி, பதவி என்கின்ற வரம்புகளைக் கடந்து வந்து, தாங்கள் ஒன்றுபட்டு, தமிழர்களின் ஒருமைப்பாட்டைக் காட்டிவிட்டு, அதற்குப் பிறகு தேர்தலால் மக்களை ஒன்றுபடுத்திக் காட்டட்டும். கடலில் வீழ்ந்த ஒருவன் எதைப் பிடித்தேனும் நீந்திக் கரையேற முடியாதா என்று துடிப்பானாம். பொது வேட்பாளர் கோரிக்கைக்காரரின் நிலையும் அதுவாகத்தான் இருக்கிறது.

**சல்லடையார் சலிப்பு :- 'கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போக முயன்றானாம்' என்ற கதை தான் போங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளருக்காக இரண்டு சாமிமார்களின் பெயர்கள் முன்நிறுத்தப் படுகிறதே. அவ்விருவரில் யாரை நிறுத்தலாம் என்று நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** சாமியார்கள் பற்றிய உங்களது எண்ணம் கவலை தருகிறது. உண்மைச்சாமியார்கள் உங்களை மன்னிப்பார்களாக!

ஜனாதிபதித் தேர்தக் பொது வேட்பாளராக யாரை நிறுத்தலாம் என்பது பற்றி, சென்ற முறையே பதில் சொல்லி விட்டேன். தமிழ்மக்களின் ஒருமித்த உணர்வைக் காட்டவேண்டும் என்பதற்காகத்தான் ஒரு பொது வேட்பாளர் தேவைப்படுகிறார் என்றால், அதற்கு மக்கள் ஆதரவுள்ள ஒரு தலைவர் தேவையில்லை! அத்தகைய ஒருவரை நிறுத்தினால், கொள்கைக்காக அன்றிக் குறித்த தலைவரின் ஆதரவிற்காகத்தான், மக்களின் வாக்குகள் வீழ்ந்தன என, எண்ண வேண்டிவரும்.

அது கொள்கைக்கான தமிழ்மக்களின் ஒருமித்த உணர்வைக் காட்டாமல், குறித்த தலைவரின் மீதான ஆதரவைக் காட்டவே உதவும். அதனால்தான், 'ஊர்பேர் தெரியாத' ஒரு சாதாரணரைப் பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்கிறேன். யாரென்று தெரியாத அவருக்குத் தமிழ்மக்கள் காட்டும் ஆதரவைக் கொண்டு, தமிழ்மக்களின் கொள்கை விருப்பை உலகிற்கு நாம் உணர்த்தலாம்.

அடுத்து, முன்வைக்கப்படும் இரண்டு சாமியார்களில் யாரை நிறுத்தலாம் என்பது பற்றிய உங்களின் கேள்விக்கு வருகிறேன். அது பற்றி நான் பதிலேதும் சொல்ல விரும்பவில்லை. அதே நேரம் சாமியார்கள் பற்றிய உங்களுடைய எண்ணங்களிலிருக்கும் பிழையான பதிவை சற்றுத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தாடி, காவி, விபூதி, குங்குமம் என்பவற்றை மட்டும் வைத்து ஒருவரைச் சாமியாராகத் தயவு செய்து தீர்மானித்து விடாதீர்கள். முன்பு மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டுக் கவியரங்கில், கவிஞர் இளந்தேவன் பாடிய, 'சாமியாராவதற்குத் தாடி வைப்பதுதான் தகுதி என்றால், வெள்ளாடு கூட விண்ணப்பிக்கலாமே!' என்ற கவிதைதான் ஞாபகத்திற்கு வருகிறது.

நமது வரலாற்றில் இந்தச் சாமியார் வேடத்தைப் பயன்படுத்தி பலரும் பலரையும் ஏமாற்றியிருக்கிறார்கள். பெரியபுராணத்தில் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல வந்த முத்தநாதன் என்பவன் இந்தச் சாமியார் வேடம் பூண்டுதான் வந்தானாம்.

மகாபாரதத்தில் ஜராசந்தனைக் கொல்ல வந்த கிருஷ்ணர் முதலியோரும் அந்தச் சாமியார் வேடம் பூண்டுதான் வந்தார்களாம். சீதையை அபகரிக்க வந்த இராவணனும் அந்தச் சாமியார் வேடம் பூண்டுதான் வந்ததாய்க் காவியங்கள் சொல்கின்றன. அவ்வளவு தூரத்திற்குப் போவானேன்? நம்நாட்டின் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவை கொல்ல வந்தவனும் சாமியார் வேடம் பூண்டுதான் வந்தான் என்கிறார்கள்.

இத்தனை அனுபவங்களுக்குப் பிறகும் சாமியார் வேடத்தில் வருகிறவர்கள் எல்லாம் உத்தமர்களாய் இருப்பார்கள் என்று நினைப்பது எவ்வளவு மடத்தனம்? மக்களை ஏமாற்றி இலாபம் சம்பாதிப்பதற்குரிய பலம் தமக்கில்லாததால், எல்லோராலும் நம்பப்படுகிற சாமியார்களின் வலிய வடிவத்தைப் பயன்படுத்தி, ஏமாற்றி வாழ நினைப்பவர்கள் பலர்.

திருவள்ளுவர் இந்தப் போலிச் சாமியார் வேடதாரிகள் பற்றி ஒரு குறளில் சொல்லியிருக்கிறார். ஒருபசுபுலித்தோலைப்போர்த்துக்கொண்டுபயிரை மேய்வதுபோலத் தான், இத்தகைய பொய்யர்கள், சாமியார் வேடத்தைப் பயன்படுத்தி ஊரை மேய்வார்கள் என்கிறார் அவர்.

'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்து மேய்ந்தற்று' என்பதுவே வள்ளுவர் சொல்லும் அக் குறளாகும். பெற்றம் என்பது பசுவைக் குறிக்கும் ஒரு சொல். திருவள்ளுவர் இப்படிக் குறிப்பால் சொன்ன விடயத்தை உரையாசிரியர் பரிமேலழகர் இன்னும் அழகாக விளக்கம் செய்கிறார்.

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

பசுத்தோல் போர்த்த புலி என்று சொல்வது தான் பொது வழக்கம். வள்ளுவரோ அதற்கு மாறாக இக்குறளில் புலித்தோல் போர்த்திய பசுவென ஓர் உவமையைக் கையாளுகிறார். அவ் உவமையைத் திருவள்ளுவர் கொண்டு வந்த காரணத்தைப் பற்றிப் பரிமேலழகர் விளக்குகிறார்.

புலித்தோலைப் போர்த்திக் கொண்டு மேய்ந்தால்வயற்காவலர்கள்தன்னைத்துரத்தமாட்டார்கள் என்னும் காரணத்தினாலேயே பசு புலித் தோலைப் போர்த்துக் கொண்டு மேயுமாம் என்று சொன்ன அவர், வயலுக்குள் நிற்கும் புலியைக் காவலர்கள் துரத்தாமல் விடுவதற்கான இரண்டு காரணங்களையும் தொடர்ந்து சொல்லுகிறார்.

புலியின் மேலிருப்பதான அச்சத்தாலும், புலி ஒருக்காலும் புல் மேயாது எனும் காரணத்தினாலுமே, வயற் காவலர்கள் புலித்தோல் போர்த்திய பசுவைத் துரத்தாமல் விடுவார்களாம். அது போலத்தான் சாமியார்கள் சபித்துவிடுவார்கள் எனும் அச்சத்தாலும், சாமியார்கள் ஒரு நாளும் பிழை செய்யமாட்டார்கள் எனும் நம்பிக்கையாலுமே, சாமியார் வேடத்தில் வரும் எல்லோரையும் மக்கள் நம்பி விடுகிறார்களாம் என்கிறார் அவர்.

நீங்கள் சொன்ன சாமியார்கள் பற்றிப் பதில் சொல்ல மாட்டேன் என்று முன்னரே சொல்லிவிட்டபடியால் தயவு செய்து அவர்கள் பற்றித்தான் இங்கு நான் சொல்வதாகத் தவறாக நினைத்துவிடாதீர்கள்.

**சல்லடையார் சலிப்பு :- வாரிதியார் சிலரை வைத்துக் 'காரியம்' செய்கிறார் போல. 'குசும்புக்கு' இவரைக் கேட்டுக் கொண்டுதான்.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- நடுநிலையாளரான உங்களுக்கு பா.ஜ.கவின் கடும் இந்துக் கொள்கை வெறுப்பைத் தரவில்லையா?**

**உலக்கையார் பதில் :-** நடுவுநிலைமை என்பதன் அர்த்தத்தை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இருவருக்கிடையில் பிரச்சுனை என்று வரும்போது, 'நான் அவர் பக்கமும் இல்லை இவர் பக்கமும் இல்லை' என்று உரைப்பது நடுநிலை ஆகாது. பாரபட்சம் இன்றி ஆராய்ந்து எவர் பக்கம் உண்மை இருக்கிறது என்று உரைப்பதுவே நடுவுநிலைமை ஆகும்.

பா.ஜ.க. இல் உள்ள சில இந்துத்துவக் கடும் போக்காளர்களின் செயல்களை நான் ஒருக்காலும் ஆதரிக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர்களின் செயல்களை நான் வன்மையாகக் கண்டிக்கவே விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்தியாவை இந்து நாடாக அறிவிக்க முயலும் அவர்களது கொள்கையில் எனக்கு உடன்பாடுண்டு. ஒருமித்து நின்று சுதந்திரத்திற்காகப் போராடி விட்டு, அது கிடைக்கும் நேரத்தில் மதத்தைக் காட்டி ஜின்னா அன்று நாட்டைப் பிரித்துச் சென்றாரோ? அன்று அவரே இந்தியா ஓர் இந்து நாடு என்பதை உலகிற்கு அறிவித்து விட்டார்.

இன்று பெரும்பாலும் உலக நாடுகள் எல்லாம் தமது மதச் சாயலை வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றன. அவற்றில் சில அத்தோடு நில்லாமல், மற்றைய மதங்களின் வழிபாட்டு உரிமைகளை மறுத்தும் நிற்கின்றன.

ஆலயங்கள், அருளாளர்கள், தத்துவங்கள், தோத்திரங்கள் என்பனவான இந்துமதத்தின் வேர்கள், இந்தியா முழுவதும் பரவிக்கிடப்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்த அளவிற்கான விரிவை மற்றைய மதங்கள் இந்தியாவில் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படை.

வரலாற்று அடிப்படையில் புதிய மதங்கள் சில இந்தியாவிற்கு மிகத் தாமதமாகவே வந்து சேர்ந்தன என்று தெரிகிறது. இந்நிலையில் இந்தியாவை ஓர் இந்து நாடாக அறிவிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பதுவே எனது கருத்தாகும்.

அதே நேரத்தில் அன்பையே கடவுளாகக் கொண்ட இந்து மதத்தவர் எவரும், எக் காரணம் கொண்டும் மற்றைய மதத்தவர்களின் வாழ்வுரிமையையோ, வழிபாட்டு உரிமையையோ மறுப்பதையும், இழிவு செய்வதையும் ஒருக்காலும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படிச் செய்துதான் இந்தியாவை இந்து நாடாக அறிவிக்க வேண்டும் என்றால், அப்படிப்பட்ட ஒரு இந்தியா நமக்குத் தேவையில்லை என்பேன்.

**சல்லடையார் சலிப்பு :- உண்மையான நடுநிலையாளர் இவர்தானுங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# ஐஸ் ரகப் போதைப் பொருளுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்

**(கே.வசந்தன்)**

ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.



வவுனியா பொலிஸ் நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் எச்எம்.ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் குழு இரகசியத் தகவலையடுத்து கடந்த 28 ஆம் திகதி செட்டிகுளத்தில் வசிக்கும் 35 வயது இளைஞர் ஒருவரை 17 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வைத்துக் கைது செய்தது.

நீதிமன்ற அனுமதி பெற்று அந்த இளைஞர் பொலிஸாரால் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் உக்குளாங்குளம், மில் வீதி பகுதியில் வைத்து செட்டிகுளத்தில் வசிக்கும் 36 வயதுடைய இளைஞரும் 12 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த இருவருக்கும் ஐஸ் போதைப் பொருளை விநியோகித்தவர் எனக் கூறப்படும் வவுனியா நகரப் பகுதியில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் மதவுவைத்த குளத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். அவருடைய வீட்டில் இருந்தும் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மூவரையும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழாச் சிறப்பு நிகழ்வு





இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சுப்ரமணியம் வித்தியானந்தன் அவர்களின் நூறாவது பிறந்த தினம் கடந்த புதனன்றாகும்.

இதனையொட்டி பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறக்கட்டளையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நூற்றாண்டு விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளன. இந்த விழா இன்றும் நாளையும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இலங்கையில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் பத்திரிகைத்துறை முனேனற்றத்திற்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கியவராக விளங்கும் சு.வித்தியானந்தன் முன்னணி எழுத்தாளருமாவார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ள வித்தியானந்தனின் பல கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவை இன்றும் பயன்மிக்க நூல்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

சு. வித்தியானந்தன், யாழ்ப்பாணம், வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஒன்றியக் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியைக் கற்ற இவர் இலங்கைப் பல்கலைக் கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வியைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாக இருந்துள்ளனர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதல் கல்விமானாகவும் விளங்கினார். தனது 26 ஆவது வயதில் பிரித்தானியா சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்று கலாநிதி பட்டம் பெற்றுக் கொண்டவர். தாயகம் திரும்பிய பின்னர் பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

அதேநேரம், 1970 ஆம் ஆண்டில் மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரிஸில் நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் இலங்கையில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் வித்தியானந்தன், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1972 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார் வித்தியானந்தன். அதன் பின்னர் 1979 ஜனவரியில் அவ்வளாகம் பல்கலைக்கழகமான போது அதன் முதலாவது துணைவேந்தரானார் அவர். பல்கலைக்கழக வளாகமாக இருந்த யாழ். பல்கலைக்கழகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக மேம்படுத்துவதற்கு அவர் அரும்பாடுபட்டு உழைத்தார்.

பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணம் வளாகத் தலைவராகவும் தொடர்ந்து மும்முறை யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரைப் பற்றி ஏனையோர் கூறிய கருத்துகள் கூறியவை வருமாறு:-

### பேராசிரியர் இளையதம்பி அம்பிகைராஜா

பேராசிரியர் சுப்ரமணியம் வித்தியானந்தன் அவர்களது சேவைகளும் பணிகளும் இன்று வெளியாகும் நூலில் சிறப்பாகப் பேசப்படும். அவற்றில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவை:-

அவர் தமிழ் மொழி மீது கொண்ட பற்று.

1977இல் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று அந்த வளாகம் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெறுவதற்குப் பங்காற்றி, 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணிகொண்டு அருஞ் சேவையாற்றியமை.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மருத்துவர்கள் உருவாகவேண்டும் என்ற நோக்கில் யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிப்பதற்கு அயராது பாடுபட்டு பல தடைகள் தாண்டி, அதனைச் சாதித்த ஆளுமை.

தமிழ் நாட்டார் பாடல்கள், இலக்கியங்கள், நாட்டுப்புறக் கலைகள், என்பவை தமிழ் மக்களின் அடையாளங்கள் என்பதனை நன்கறிந்து, அழிந்து கொண்டிருந்த அவற்றை ஆவணப்படுத்தி, பாதுகாத்து இனத்தின் இருப்பை உறுதி செய்தமை.

நாட்டுக்கூத்துக் கலையை நவீன வாழ்க்கை முறைக்கு உகந்த முறையில் நவீனப்படுத்தி பாமரரும் படித்தவரும் இரசிக்கத் தக்க வகையில் மெருகேற்றி அளித்தமை.

வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற தமிழ் பிரதேசங்களின் ஒருமைப்பாட்டை கலைகளாலும் கல்வியாலும் இணைத்து தமிழ்த் தேசியத்தைப் போற்றியமை.

××××××××××××××××××

### கலாநிதி திருநாவுகரசு கமலநாதன்

பேராசிரியர் சு.வித்தியானந்தனது வாழ்வே தமிழருக்குரிய செய்திகளைக் கையளிக்கும் பெரும் காவியம். அது தமிழர் புலமை வாழ்வையும் அரசியல் வாழ்வையும் கலை மற்றும் சமூக வாழ்வையும் உள்ளடக்கிய பெருநிறைவுக் காவியம். தமிழர் தேசியத்தை, இஸ்லாம், கிறீஸ்தவம் ஆகிய மதங்களை உள்ளடக்கிய அகன்ற பரிமாணங்களைக் கொண்ட நிகழ் காவியமாக்கியவர். அகலாங்கு நிலையிலும் நெட்டாங்கு நிலையிலும் தமிழ் தேசியத்துக்கு விரிவு கொடுத்தவர்.

தமிழர்களின் உயர் கல்விச் சிந்தனைகளையும் எதிர் பார்ப்புகளையும், ஆய்வின் உச்சங்களையும் உயர்கல்வியின் உயிர்ப்புக்களையும் வழங்கும் பெரும் கோயிலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை முன்னிறுத்திய அவரின் பணிகள் பின் வந்தோருக்கு அறிவு விளை நிலமாயின.

சமூக நீதி, சமூக சமத்துவம் ஓங்கி உயர்ந்த தமிழ் மொழிக்கான அரசியல் நீதி,தமிழர் மரபு-வழி வாழ்விட நீதி, ஒடுக்கு முறையற்ற சக வாழ்வு முதலாம் அவரது சிந்தனைகளும் செயல் வாழ்வும் என்றுமுள்ள தமிழாய் நிலைத்து நிற்கும்.

அவர் செயல் நீட்சியும் வாழ்வியல் முறைமையும் என்றும் எம்மவர்க்கு வழிகாட்டி வாழ்விக்கும்.

××××××××××××××××××

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**பேராசிரியர்**
**கலாநிதி சி. பத்மநாதன்**

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டைத் தடை செய்வதாக அரசாங்கம் பின்பு கட்டளை பிறப்பித்தது. அதன் அமைப்புக் குழுவினரையும் கைது செய்வதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதே சமயம் பண்டாரநாயக்க குடும்பத்து இளந் தலை முறையினர் குமாரசூரியரின் சொல்லைக்கேட்டுத் தமிழர் சமுதாயத்தோடு முரண்படுவது தேவையற்றது, கேடு விளைவிக்கக் கூடியது என்று சிறிமா அம்மையாரிடம் வலியுறுத்தினார்கள். அதனால் பிரதமர் தானாகவே முன்வந்து தடை உத்தரவினை நீக்கினார். இது இப்பொழுதுள்ள பலருக்குத் தெரியாத கதை.

பேராசிரியர் வித்தியானந்தனின் துணிவான, வீரமான, உறுதியான நிலைப்பாட்டினால் வியப்புற்ற யாழ்ப்பாண தேசத்தவர் விழிப்புற்றனர். இயன்ற அளவான எல்லா ஆதரவுகளையும் செய்வதற்கும் முன் வந்தனர்.

அந்தச் சமூகத்தவர் தங்கள் உரிமை உணர்வுகளையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்துவதற்கு அந்த மாநாட்டை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதனை உவமையிலாத வெற்றிவிழாவாக்கிக் கொண்டாடினார்கள். யாழ்ப்பாணம் முழுவதுமே வரலாறு காணாத விழாக்கோலம் பூண்டது. பெருந்தெருக்கள், சந்திகள், கடைத்தெருக்கள் முதலான எல்லாம் வண்ணப் பதாகைகளினாலும்

தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டன. குலை வாழைகளையும் தென்னம்பிள்ளைகளையும் பெயர்த்து வந்து ஆங்காங்கு அப்படியே நாட்டியிருந்தார்கள். மாநாடு நடைபெற்ற சமயத்தில் இந்திர விழாக்கோலம் போல யாழ்ப்பாணம் காட்சியளித்ததென்று தினபதி பத்திரிகையின் தலையங்கத்தில் எழுதினார்கள்.

பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கை இன்ப, துன்பங்கள் நிறைந்தவொன்று ஆயினும், பிறரிடம் காணாத சில பண்புகள் அவரிடம் இருந்தன. தனக்குத் தீங்கு செய்த வர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்யும் தயாள குணம் அவருக்கு மட்டுமே உரியதாகும். உற்றவர்களின் இன்ப, துன்பங்களில் பங்குகொள்ளும் சிறப்பு அவருக்கு உரியது. அவரைப் போலப் பழிவாங்கும் எண்ணம் இல்லாதவர்களை எம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. சொந்த நலன்களுக்காகச் சமுதாய நலவுரிமைகளைப் பணயம் வைக்கும் போக்கு அவருக்கு அன்னியமானது. பிறரிடம் காணமுடியாத மனவுறுதி யினையும் துணிவினையும் அவரிடம் தான் காணமுடிந்தது. அவருடைய வீரமான சாதனை வரலாற்றுச் சிறப்புடையது. நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினால் ஏற்பட்ட தமிழர் பேரெழுச்சி நினைவுச் சின்னம் பெற்றுப் போற்றுவதற்கு உரியதாகும்.

××××××××××××××××××

**Professor**
**S.Thillainathan**

Vithy's academic record is an enviable one. There were several firsts to his credit. He was the first Tamil Honours graduate of the university of Ceylon and the first to obtain an M.A in Tamil from the same University as the most beloved and respected student of Swami Vipulananda. He secured the Ph.D degree from the University of London in 1950 at the age of twenty-six having researched into Tamil civilization of the Sangham period.

His other major contribution was in establishing the identity of Sri Lankan Tamil culture and literature through his research and publications in folk arts, religion and history.

Vithy was actively associated with the Tamil Society at the University in Peradeniya first as its Senior Treasurer and later as its Patron. The money collected from the plays that he produced went to furnish endowments at the University to award prizes for the best students in Tamil at the University Entrance, General Arts Qualifying, General Arts degree and Special Arts degree examinations.

×××××××××××××××××

**கௌரவ இலக்கிய முதுகலாநிதி**
**அ. ஷசண்முகதாஸ்**

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழிலக்கியத்தினுள் ஒரு பகுதியாக அமையும் இஸ்லாமிய, கிறிஸ்தவ இலக்கியங்கள் பற்றியும் ஆய்வு செய்து பல கட்டுரைகளையும் நூலையும் எழுதியுள்ளார். 1953 ஆம் ஆண்டு தொடக்கமே கலாநிதி வித்தியானந்தன் இஸ்லாமியர் இலக்கியம், கலை, சமயம் பற்றிச் சிந்தித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் மன்ற இதழாகிய University Majlis என்பதில் இவர் இஸ்லாமியரும் தமிழும், இஸ்லாமியர் தமிழிற் பாடிய புதிய பிரபந்த வகைகள், இஸ்லாமியர் நாடோடிப் பாடல்கள், இஸ்லாத்தின் திருத்தூதர் காட்டிய வழி என்னுங் கட்டுரைகளை எழுதியுள்ளார். இலக்கியம் மாத்திரமன்றி இஸ்லாமியருடைய கலை, பண்பாடு என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து கலையும் பண்பும்" (1961) என்னும் நூலை எழுதினார்.

தமிழில் ஏற்கனவே தோன்றிய காப்பியம், கலம்பகம், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, திருப்புகழ், கும்மி, தாலாட்டு, மாலை, ஏசல், சிந்து முதலிய இலக்கிய வடிவங்களை இஸ்லாமியப் புலவர்கள் கையாண்டமை பற்றியும் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்த அவர்கள் முனாஜாத், படைப்போர், கிஸ்ஸா, மசலா, நாமா முதலிய இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தியமை பற்றியும் இவ்வியல்களிலே வித்தியானந்தன் விரிவாகக் கூறியுள்ளார்.

கிறிஸ்தவர்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு பற்றியும் இவர் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். தமிழ்ச்சங்க இதழாகிய இளங்கதிரில் கிறிஸ்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும் (1962) என்னும் கட்டுரையினையும், உடுவில் மகளிர் கல்லூரி இதழிலே அமெரிக்க மிஷனும் தமிழர் கல்வியும் (1969) என்னும் கட்டுரையினையும் எழுதியுள்ளார். மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டில ஈழத்து மிஷனரிமார் தமிழ்த் தொண்டு (1964) என்னும் விடயம் பற்றி ஆங்கிலத்திலே ஆய்வுக்கட்டுரை படித்தார். இவ்வாறு பேராசிரியருடன் முகிழ்த்த இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆய்வுப் போக்கு இன்று வட கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகங்களிலே கிறிஸ்தவக் கற்கைகள், இஸ்லாமியக் கற்கைகள் என இரு பெரும் பீடங்களாக இயங்குகின்றன.

×××××××××××××××××

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை**

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே” எனத் தனது உரையைத் தொடங்குவது பேராசிரியர் அவர்களின் வழக்கம். அவர் இளம் விரிவுரையாளராக இருந்த காலந் தொடக்கம் மரணிக்கும் வரை பல்வேறு சமூகம், சமுதாயம் மற்றும் குடும்ப நிகழ்வுகளில் ஆர்வமாகப் பங்கு கொள்வதுண்டு. அவர் பொதுமக்களுடன் நல்ல உறவைப் பேணி வந்தார். நாடளாவிய ரீதியில் தமிழ்ச் சங்கங்கள், சபைகள் தங்களது சிறப்பு நிகழ்வுகளிற்குப் பேராசிரியரை விருந்தினராக அழைப்பது வழக்கம். நாடளாவிய ரீதியில் தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட தமிழ் அறிஞராகவும் தலைவராகவும் அவர் விளங்கினார்.

அன்று இரு பீடங்களை மட்டும் கொண்டிருந்த வளாகத்தில் மருத்துவம், விவசாயம், பொறியியல் ஆகிய பீடங்களைக் குறுகிய காலத்திற்குள் தொடங்குவதற்குரிய முயற்சிகளை பேராசிரியர் அவர்கள் முன்னெடுத்த நிலையில் 1978 இல் மருத்துவ பீடத்தினை கைதடியில் ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் 25 ஏக்கர் காணியை பல்கலைக் கழக விரிவாக்கத்திற்குப் பெற்றார். இந்தக் காணியிலேயே இன்று மருத்துவ பீடமும் மிகப்பெரிய விளையாட்டு மைதானமும் அமைந்துள்ளன. மருத்துவபீடக் கட்டடத் தொகுதிக்கு அவரே அத்திவாரம் இட்டு அவரது காலத்திலேயே அது கட்டி முடிக்கப்பட்டது. விவசாய, பொறியியல் பீடங்கள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் அவரது காலத்தில் முன்னெடுக்கப்பட்டபோதும் அவை அவரின் காலத்தில் நிறைவேற்றப்படவில்லை. ஆயினும் பின்னர் அவை நிறைவேறியதற்கு அவரின் ஆரம்ப முயற்சிகளைப் புறந்தள்ள முடியாது.

××××××××××××××××××

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**

தமிழ்த் தேசியம் சார்ந்த பேராசிரியர் வித்தியின் விரிந்த சிந்தையும் தமிழ்ப்பேசும் அனைத்து மக்களையும் தழுவிய இவரது தேடல்களும் சமூகத்தொடர்பாடல்களின் முக்கியத்துவமும் இன்று பெரிதும் உணரப்படும்.

சாதி, மதம் கடந்து நின்ற இவரின் கலைக்கூடாரத்தில் கத்தோலிக்க கலைஞர், வீரசைவக் கலைஞர், முஸ்லிம் புலவர், மட்டக்களப்பு அண்ணாவியார், மலையகக் கலைஞர் என எல்லோரும் ஒன்று திரண்டு சமூக ஒருமைப்பாட்டுடன் கலை படைத்தவாற்றினை சண்முகசுந்தரம் ஆசிரியர் அழகாகப் பதிவு செய்வார் (1979). இந்த வகையில், ஈழத்தின் உன்னத கலைஞனாக மேலெழுந்த நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் வளர்ச்சியில் அரணாக இவர் கொண்டிருந்த கவனிப்பு தனித்துவமானது.

காலத்தினாலாய இவர் பணியின் சமூக முக்கியத்துவத்தினைப் பதிவாக்கும் உரிய இடங்களிலெல்லாம் நடிகமணியின் நாடகங்களை அறிமுகம் செய்ததுடன் உலகப் பல்கலைகழக ஆவணக் காப்பகங்கள் வரை இவரின் மயான காண்டம் பதிவினை எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே மயான காண்டம் இசை நாடகத்தின் 100ஆவது அரங்கின் போது கலைஞருக்கு பொற்கிளி வழங்கி கௌரவித்தது முதல் 1000ஆவது அரங்கக் கொண்டாட்ட ஏற்பாடுகள் வரை பேராசிரியர் வித்தியின் சமூக தொடர்பியல் வல்லமையின் வீச்சினைக் காணமுடியும்.

××××××××××××××××××

**பேராசிரியர் கலாநிதி க. கந்தசாமி**

மாணவர்களுக்குக் கற்பித்தலிலே வித்தியானந்தனுக்குள்ள பேரார்வம் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராக இருந்த போது வெளிப்பட்டது. பொதுவாக இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே அவ்வப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களுள் ஒருவரே துணைவேந்தராகப் பணியாற்றுகின்றார். துணை வேந்தராகக் கடமையாற்றும் பேராசிரியர் தம்முடைய பதவிக் காலம் முடியும் வரையிலே பட்டதாரி மாணவர்களுக்குப் போதனாசிரியராக இருப்பதிலிருந்து விலகியிருப்பதே பொது இயல்பு.

வித்தியானந்தன் 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தம்முடைய சுயவிருப்பத்தின் பேரிலே பொதுக்கலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இலக்கிய வரலாறும் சிறப்புக்கலை மாணவர்களுக்குத் திருக்கோவையாரும் தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரையமும் கற்பித்து வந்தார். மாணவர்களும் மாணவர்கள் தேவைகளும் எப்பொழுதும் வித்தியானந்தனுடைய உள்ளத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்தது. வித்தியானந்தனுடைய முதல் நூலான இலக்கியத் தென்றல் மாணவர்களை மனதிலிருத்தி எழுதப்பட்டு மாணவர் சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பேயாகும்.

யாழ்.பல்கலைக்கழகம் சகல பீடங்களும் கொண்ட பூரணத்துவமான பல்கலைக்கழகமாக வளர வேண்டுமென்ற இலட்சியத்தை முன்வைத்து இவர் உழைத்து வந்தார். விவசாய பீடம் கிளிநொச்சிப் பகுதியிலே தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியது. சில ஆரம்ப முயற்சிகள் இது தொடர்பாக இவர் காலத்திலே நிறைவேறியிருந்தன. மருத்துவபீடத்தின் ஒரு பகுதியாக அல்லது தனிப்பீடமாக பல்வைத்தியப் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இடம்பெற வேண்டும் என்பதை இவர் வலியுறுத்தி வந்துள்ளார். தமிழ் மாணவர்கள் பெருந்தொகையினர் விரும்பிப் பயிலும் பொறியியல் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவ அரசு தொடர்ந்து அனுமதி மறுத்து வந்தது இவருக்குக் கவலையாக இருந்தது. வித்தியானந்தன் ஒரு பெருமனிதர். மனிதாபிமானம் என்ற பெருங்குணத்தை அபரிமிதமாகப் பெற்றவர், கருணையாளர், இவருடைய பரந்துவிரிந்த உள்ளம் இவரை ஒரு பெரிய மனிதராக இனங்காட்டுகிறது.

××××××××××××××××××

**பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா**

பேராசிரியர் கல்வி கற்ற யாழ்.இந்துக் கல்லூரியிலும் பரி.யோவான் கல்லூரியிலும் இருந்த நூலகங்கள் வாசிப்பு வழியான சுய கற்றலுக்கு ஊக்கம் தந்தன. அச்சு வழி நூல்கள் வீடுகளிலே சேர்க்கும் பணியும் அக்காலத்தில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. பேராசிரியரின் தந்தையார் வீட்டு நூலகத்தை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார் என அறியப்படுகிறது.

அந்த வளர் பின்னலின் வளர்ச்சியில் அவர் கூடுதலான நேரம் வாசிப்பில் ஈடுபடுவார் என திருமதி கமலம் வித்தியானந்தன் அவர்கள் கூறுவார். பேராசிரியரின் புலமை வளத்தில் அவருக்கிருந்த வாசிப்பு பெரும் பங்கு செலுத்தியது.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

புலமைவெளியில் பேராசிரியரது பண்பாட்டுத் தேடல் ஏட்டளவில் நிற்காது செயல் வடிவிலும் நீட்சி கொண்டது. தமிழர் கிராமியக் கூத்தின் மீட்பு, சிறப்பார்ந்த செயல் வடிவ நீட்சியாயிற்று. கூத்தை திரிபுபடுத்தாத தனித்துவம் அவரால் மேற்கொள் ளப்பட்டது. தாளக் கட்டு, ஆடல் முறைமை, ஆடை அணிகலன், பாடற்கட்டு ஆகிய அனைத்தையும் வழுவின்றிப் பாதுகாத்தமை அவரின் செவ்விய புலமைச் செயற்பாடாயிற்று.

உயர் கல்வியில் தமிழ் மொழியின் ஏற்றத் திலும் செயற்பாட்டிலும் பங்கு கொண்ட பேராசி ரியர்களுள் இவர் தனித்துவமானவர். உயர்நிலை அறிவைப் பொதுமக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில் இடம் பெற்றிருந்த மரபுவழித் தடை களைத் தகர்த்தவர். கிராமிய விழாக்களிலும் அவைகளிலும் கலந்து கொண்டு நிறைவித்தவர். மரபு வழிப் புலமையாளரை யாழ்.பல்கலைக் கழகத்தில் கௌரவித்தவர். இலங்கைத் தமிழரின் அறிவுக் குவியமாக விளங்கும் யாழ்.பல்கலைக் கழகத்தை முழு நிறைவாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்தவர்.

××××××××××××××××××

## பேராசிரியர் முனைவர் பக்தவத்சல பாரதி

பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் ஈழத்து அறிவாளுமைகளில் தனித்த அடையாளம் கொண்டவர். இவரது நினைவு களையும் சிறப்புகளையும் மீள்நினைவு செய்யும் பொருட்டு நூற்றாண்டு நினைவு மலர் வெளி யிடுவது இளந் தலைமுறையினருக்குக் கைய ளிக்கும் உயர்நோக்கம் கொண்டது.

சங்க இலக்கியங்கள் மீது பேராசிரியர் வித் திக்கு இருந்த ஆய்வார்வத்துக்கு இணையாக அல்லது அதிகமாக நாட்டார் வழக்காறியல் சார்ந்த இவரது தேடல் அமைந்திருந்தமையும் சிறப்பான கவனத்துக்குரியது.

உயரிலக்கியங்களையே உண்மையான இலக்கியங்களாகக் கருதி வந்த ஒரு பண்பாட்டு வட்டத்தினுள் எழுதாக்கிளவியான நாட்டுப்பாட லையும் நமது இலக்கியப் பாரம்பரியத்தின் பிரிக்கமுடியாத அங்கமாகக் கொண்டாடியோருள் வித்தியானந்தனும் முக்கியமானவர். நாட்டுக் கூத்து மரபை மீட்டெடுத்து அதனை நமது பண் பாட்டுக்குரிய இயல்பான நாடக வடிவமாக நிலை நிறுத்தியமையும் பேரா.வித்தியின் மேதா விலா சத்தின் முக்கிய அம்சமாகும்.

பேரா.வித்தியின் புலமைப் பலத்தால் தாமும் அடையாளம் பெற வேண்டுமென எண்ணிப் பலரும் தாம் எழுதிய நூல்களுக்குப் பேராசிரி யரிடமிருந்து அணிந்துரைகள் பெற்று நூல்களை வெளியிட்டனர். பேரா.வித்தி அளித்த அந்த அணிந் துரைகள் நூல்களுக்குப் புதிய கண்திறப்புகளாக அமைந்தமையும் இங்கு கவனத்துக்குரியது.

பேரா.வித்தியின் சமூக பண்பாட்டு உணர் திறனான மேதாவிலாசத்தினை தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் போற்றி நிற்கும்.

××××××××××××××××××

## இராசையா பேரின்பநாயகம்

பேராசிரியர் வித்தியானந்தன் தம் வாழ்வில் கல்விப் பணிகளுக்கும் அப்பால் நின்று, தாம் வாழ்ந்த சமூகத்திற்காக ஆற்றிய பணிகள் எண் ணில் அடங்கா.

அவர் பணிகளும், சேவைகளும் மிக விரிந் தன. அகிலம் போற்றும் தமிழாராய்ச்சி மாநாடு பேராசிரியர் அவர்களுக்கு மங்காப்புகழை தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் கொடுத்து மகிழ்ந் தது.

துணிவும் தெளிவும் கொண்டு செயற்படும் பேராசிரியப் பெருந்தகையைக் காங்கேயன்துறை தேர்தற் தொகுதி மூலம் நாடாளுமன்றம் அனுப்பி எமது உரிமைகளுக்கு – தமிழ் மக்களின் உரி மைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டுமென தலைவர்களும் தொண்டர்களும் விரும்பினர். பேராசிரியர் தமது பணிகள் கல்வித் துறையில் இன்னமும் பூர்த்தியாகாத நிலையில், முழு நேர அரசியலுக்கு வர விரும்பவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்திற்கு அமை தியாக வலுச் சேர்த்த வண்ணம் இருந்தார். எண்ணற்ற பணிகளுக்குப் பாதை வகுத்துக் கொடுத்தார். பல புகழ்பெற்ற கல்விமான்களை உருவாக்கினார். அன்னாரது பங்களிப்பை, ஏனையோரும் தொடர்ந்திருந்தால், எமது நிலை இன்றுள்ள அளவுக்குத் தாழ்ந்து போயிராது என்பது மட்டும் உண்மை.

××××××××××××××××××

## மறவன்புலவு க. சச்சிதானந்தன்

யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துல கத் தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத் திய குழுவின் தலைவர் சு. வித்தியானந்தன்.

தலைவராய்ப் பொறாமை அற்ற பொறுமை சாலி.

தலைவராகி அன்பால் அரவணைப்பவர்.

தலைவரின் நெஞ்சுறுதி, அஞ்சாமை நிறைந்தவர்.

தலைவராதலால் இதனை இதனால் இவன் முடிக்கும் என முன்கூட்டியே திட்டமிடுபவர்.

தலைவராதலால் களைப்பின்றிப் பயணித்த வர். மடியற்ற சோர்விலர்.

தலைவருக்குரிய சாணக்கியரானவர். தலை வருக்குரிய வெல்லும் சொல் வேறு கேட்காச் சொல்வலர். அவருடன் பணியாற்றிய சில மாதங் களில் இவை யாவின் மறு உருவமாக அவரைக் கண்டேன்.

தடைகளுக்கு மேல் தடை எனக் கொக்கரித்து ஓலமிட்டது அரசு. மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள் தடையைத் தானாகவே முன்வந்து நீக்கி யது. காரணம் பேராசிரியர் சு.வித்தியானந்த னின் தலைமையே.

பேராசிரியர் வித்தியானந்தன் கண்டியில் இருப்பார். கொழும்பில் இருப்பார். யாழ்ப்பாணத் தில் இருப்பார். எந்த நாள் எங்கு இருப்பார் எனச் சொல்ல முடியாதவாறு கடுமையாக உழைத்தார். சோர்வின்றிப் பயணித்தார்.

அரசுத் தடைகளை மீறி யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவோம் என்ற உறுதியே, ஊச லற்ற ஈடாடா உறுதியே பேராசிரியர் வித்தியா னந்தன். இந்த உறுதியே, இந்த விடாப்பிடியே, இந்தக் கடுமையே உணர்வுத் தமிழ் நெஞ்சங் களின் பூரிப்பு. தமிழ் இளைஞர் உள்ளங்களின் ஆர்ப்பரிப்பு. தமிழ்த் தேசிய மனங்களுக்கு மலர்ச்சி.

××××××××××××××××××

## முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஈழத்தமிழறி ஞர்களில் தனித்துவமாக நோக்கப்பட வேண்டிய வர். இவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளிலே விதந்து பேசப்பட வேண்டிய தனித்துவமான பணி நூற் பதிப்புப் பணியாகும்.

பேராசிரியருடைய பதிப்புப்பணி வாய் மொழியாகவும் ஏட்டுவடிவிலும் இருந்த நாட்டுக்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

கூத்துப் பாடல்களை நூலாகப் பதிப்பிக்கும் முயற்சியாக இருந்தது.

பேராசிரியர் பதிப்பித்த கூத்து நூல்களில் அலங்காரரூபன் நாடகம், எண்டீக்கு எம்பர தோர்நாடகம், கஞ்சன் அம்மானை என்பவை இவருடைய பதிப்புப் பணி பற்றியறிய உதவுகின்ற சான்றாக உள்ளன.

இரவு முழுவதும் ஆடப்படுகின்ற நாட்டுக் கூத்தை மேடைக்கூத்தாக அமைத்து குறுகிய காலப்பொழுதிலே கண்டு சுவைக்க வைக்கப் பேராசிரியர் முயற்சி செய்து வெற்றி பெற்ற வேளையும் அக்காலமே.

இவருடைய இந்த முயற்சி கூத்தைப் பலர் கண்டு கண்டு களிப்பதற்கு மட்டுமன்றி கூத்துப் பற்றிய விரிவான செய்திகளைத் தேடுவதற்கும் ஓர் உந்துதல் அளித்தது. அதற்காகப் பிரதிகளை நூலாக்கம் செய்வதும் இன்றியமையாததாயிற்று. எனவே, பேராசிரியர் தாம் பதிப்பித்த நூல்களின் முன்னுரையிலே ஈழத்துக் கூத்துப்பற்றிய செய்திகளைப் பதிவு செய்துள்ளமை பின்வந்த கூத்துப்பற்றிய தேடலை மேற்கொள்வோருக்கு ஒரு நல்ல வழிகாட்டலாக அமைந்துள்ளது.

××××××××××××××××××

**கலாநிதி**
**ஆறு.திருமுருகன்**

பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றிய காலத்தில் இவர் பல தீர்க்கதரிசனமான சிந்தனைகளோடு செயற்பட்டார். சங்கீதம், நடனம், பண்ணிசை போன்ற கலைத் துறைகளை தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பாகக் கற்கும் நிலையை உருவாக்குவதற்கு அயராது பாடுபட்டார். சேர். பொன்.இராமநாதனின் பெயரில் அவரது மருகர் சு.நடேசபிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் மியூசிக் அக்கடமி தனிப்பட்ட நிறுவனமாகச் செயற்பட்டு வந்தது. கர்நாடக சங்கீதம், வீணை, மிருதங்கம், வயலின், பண்ணிசை போன்ற கற்கை நெறிகள் அங்கு போதிக்கப்பட்டு வந்தன. இராமநாதன் அக்கடமியை பல்கலைக்கழகம் ஆக்கவேண்டும் என்ற சிந்தனை பேராசிரியர் அவர்களுக்கு ஏற்பட்டது. அயரா முயற்சியினால் இராமநாதன் அக்கடமியை பல்கலைக்கழகமாக மாற்றினார். அதற்குப்பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு மருத்துவபீடத்தை உருவாக்கவேண்டும் என்று பேராசிரியர் அவர்கள் சிந்தித்தார்.

எமது தமிழ் மாணவர்கள் அதிகம் மருத்துவ பீடத்தில் கற்க வேண்டும் ஆனால் எமது மண்ணில் ஒரு மருத்துவபீடத்தை உருவாக்கவேண்டும் என்பது சாலச்சிறந்தது என பேராசிரியர் கருதினார். இந்நிலையில் கொக்குவில் கிழக்கில் நடைபெற்ற ஒரு பொது வைபவத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவ்விழாவில் பேசிய பேராசிரியர் அவர்கள், கொக்குவில் திருநெல்வேலிப்பகுதியில் பெரிய நிலம் கிடைக்குமேயானால் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஒரு மருத்துவபீடத்தினை உருவாக்க முடியும் என்று பேசினார். இவரது பேச்சைக் கேட்ட கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்தவரும் எனது தாய்வழி மாமனாரும் ஆகிய திரு.சுப்பையா ஆறுமுகராசா அவர்கள் பேராசிரியர் அவர்களுக்கு ஒரு போஸ்ட் கார்ட் கடிதம் போட்டார், அக்கடிதத்தில் ஆடிய பாதம் வீதியில் சூத்திரக் கிணற்றோடு கூடிய தனது தோட்டத்தை மருத்துவ பீடம் அமைப்பதற்குத் தரமுடியும் என எழுதினார். பேராசிரியர் அவர்கள் கடிதம் கிடைத்த அன்று மாலையே கொக்குவில் பிரம்படி வைரவர் கோயில் வளவில் வசித்த திரு. ஆறுமுகராசா அவர்களைச் சந்தித்துக் காணியைப் பார்வையிட்டார்.

இரவு பகலாக அந்த நிலத்தை மருத்துவ பீடத்துக்கு சட்டபூர்வமாகப் பெறுவதற்கு வழிசெய்தார்.

துரித முயற்சியினால் மருத்துவபீடத்திற்கான நிலத்தை உறக்கமின்றித் தேடினார்.

உயர்கல்வி அமைச்சு தலைவராக விளங்கிய டாக்டர் கல்பகே அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து மருத்துவபீடக் கோரிக்கையை சிபாரிசு செய்யுமாறுபேராசிரியர் வேண்டினார். யாழ்ப்பாணத்தில் இயங்கிய அன்றைய பிரபல சுபாஷ் ஹோட்டலில் ஒரு விருந்துபசாரத்தை நடத்தி கல்பகே அவர்களை இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு பேராசிரியர் வேண்டினார். கொழும்பில் இக்கோரிக்கையை உயர்கல்வி அமைச்சு ஏற்க மறுத்தது.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கு உயர் கல்வி அமைச்சு கடிதம் ஒன்றை அவசரமாக அனுப்பியது. மருத்துவ துறை சார்ந்த அறிஞர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கு யாராவது முன்வருவார்களா? அப்படி முன்வரக் கூடியவர்களின் பெயர்ப்பட்டியலைத் தாங்கள் அனுப்பி வைக்கும் பட்சத்தில் இவ்விடயம் தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படும் என அவர்கள் தெரிவித்தார்கள். பேராசிரியர் அவர்கள் சிங்கப்பூரில் வசித்த மருத்துவபீட பேராசிரியர் கனகசுந்தரம் முதல் ஆறு மருத்துவத்துறை சார்ந்த அறிஞர்களின் சம்மதக் கடிதத்தைப் பெற்று அமைச்சர் முதல் பலரைச் சந்தித்தார். பேராசிரியரின் முயற்சியாலும் இறையருளாலும் மருத்துவ பீடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன், கைதடியில் தற்காலிக கட்டடத்தில் மருத்துவபீட அங்குரார்ப்பணமும் இடம்பெற்றது. ஒரு சில மாதங்களில் கொக்குவில் திருநெல்வேலி வீதியில் பெற்ற நிலத்தில் மருத்துவ பீடத்திற்கான அடிக்கல்லினை பேராசிரியர் நாட்டி கட்டடநிர்மாண வேலையை ஆரம்பித்தார்கள்.

××××××××××××××××××

**கலாநிதி**
**ஏ.சி.எல். அமீரலி**

தமிழ் மொழியைக் கற்கும் எந்த மாணவனும் தமிழ் இலக்கணத்தை விருப்புடன் கற்பதில்லை. ஆனால், அந்தப் பாடத்தை மாணவர்களின் சிரிப்பொலி பொங்கக் கனிவுடன் ஊட்டியவர் வித்தி.

இலக்கணம் பாகற்காய் என்றால் வித்தியின் ஹாஷ்யங்கள் அதனை இனிப்பாக்கும். அந்தத் திறமை அவருக்கே கைவந்த ஒரு வித்தை என்று கூறலாம்.

இலங்கைத் தமிழரின் கிராமிய நாடகக் கலையை அழிந்து போகாமல் வாழச் செய்தவர் புனருத்தாரணர் வித்தி. சிங்கள சமுதாயத்தின் கிராமிய நாடகக்கலைக்கு எவ்வாறு பேராசிரியர் பா.எதிரிவீர சரச்சந்திர புத்துயிரளித்து நவீனப் படுத்தினாரோ அதே சாதனையை வித்தியானந்தன் தமிழரின் கிராமிய நாடகக்கலைக்குச் செய்தார்.

முஸ்லிம்களின் மேல் வித்திக்கு ஒரு விசேட அபிமானம் இருந்தது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் செய்த தொண்டு ஒரு புறமிருக்க அவர்களின் சமயமான இஸ்லாத்தைப் பற்றியும் அவர் நன்கு வாசித்து அறிந்திருந்தார். அதன் விளைவுதான் "கலையும் பண்பும்" என்ற அவரது நூல் "பிறையன்பன்" என்ற புனை

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

பெயருடன் வெளிவந்தது. அது மட்டுமல்ல. மட்டக்களப்பு முஸ்லிம்கள் மருதநில வாசனையில் வாழும் மக்கள். அவர்களுக்கு, அதிலும் அங்குள்ள பெண்களுக்கு இயற்கையாகவே கவி பாடும் வல்லமை இருந்தது, இன்னும் இருக்கிறது. பல நூற்றுக் கணக்கான நாட்டுக் கவிகளின் சொந்தக்காரர் அந்தப் பெண்கள். பள்ளிக்கூடத்தின் படிக்கட்டையும்கூட மிதித்திராத இந்தப் பாமரப் பெண்டிருக்கு அந்த வல்லமை இறைவனே கொடுத்த கொடை என்று எண்ணத் தோன்றுகிறது. அந்தக் கவிகளை எல்லாம் தேடித் திரட்டி “மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்“ என்ற ஒரு நூலை வெளியிட்ட பெருமை வித்தகர் வித்திக்கே உரியது.

××××××××××××××××××

## பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன்

தமிழ்ப் பேராசிரியராகவும் துணைவேந்தராகவும் திகழ்ந்து நிறைவுபெற்றவரான கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் (1924–1989) தமது காலப்பகுதியின் தமிழியல் ஆய்வு வரலாற்றை இயக்கி நின்ற முக்கிய ஆளுமைகளுள் ஒருவருமாவார் என்பதைத் தமிழுலகம் நன்கறியும்.

ஒரு தமிழ்க் கல்வியாளர் என்றவகையிலே மிகஉயர்ந்த பட்டங்களைப் பெற்றவரும் நிர்வாகப் பொறுப்புகளை வகித்தவருமான இப் பேறிஞர் பல ஆய்வாளர்களை உருவாக் கியவர் என்ற பெருமைக்கு உரியவருங்கூட. மேலும், “அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்“ என்ற அமைப்பின் நான்காவது மாநாட்டையும் அவ்வமைப்பு சார்ந்தவையான இலங்கையின் மட்டக்களப்பு மற்றும் வன்னிப்பிரதேசம் ஆகியன சார் பிராந்திய மாநாடுகளையும் திட்டமிட்டு நிகழ்த்திய சாதனையாளர் என்பதான பெருமையும் அவருக்கே உரியது.

பேராசிரியரவர்களின் முயற்சிகளுக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்த உணர்வுநிலை என்ற வகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டியது, அவர் தமிழ்ப் பண்பாட்டின்மீது கொண்டிருந்த பெரும் பற்றேயாகும்.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதான தொடர்ச்சியான வரலாறு கொண்டவர்களான தமிழரின் பண் பாட்டு வளங்களை ஆய்வு நிலைகளில் உரியவாறு இனங்கண்டு வெளிக் கொணர்வதோடு அவற்றைக் காலச் சூழலுக் கேற்பப் பேணிக்கொள்ளவும் வளர்த் தெடுக்கவும் வேண்டும்“ என்பதுமான மன உந்துதலுடனேயே தமது வாழ்நாள் முழுவதும் ஆய்வுத்துறையில் இயங்கிநின்றவர், அவர். “இவ்வாறான இயங்கு நிலையிலே அவர், தனது தாய்மண்ணான ஈழத்தின் தமிழர்பண்பாட்டின் தனித்தன்மைகளை அடையாளங் காட்டுவதிலும் சிறப்புக் கவனம் செலுத்திநின்றுள்ளார்“ என்பதையே அவருடைய மேற்சுட்டிய எழுத்துகள், பதிப்புகள் ஆகியன தெளிவாக இனங்காட்டி நிற்கின்றன.

××××××××××××××××××

## பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

பேராசிரியர் வித்தியானந்தன் மாணவர் நலனிலே அதிக கரிசனை காட்டுவார். மாணவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்க்க வேண்டும் என்று பாடுபட்டு உழைப்பார். மாணவர்களின் நன்மை தீமைகளிலே கலந்து கொள்வார். மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடுவார்.

சிறியன சிந்தியா பெருமனம் இவரிடம் இருந்தது. கருத்து நிலையிலே, கொள்கையிலே தனக்கு மாறுபட்டவர்களையும் மாறுபட்டு இயங்குபவர்களையும் அணைத்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைத் தன்னாலானளவும் செய்யும் பெருந்தன்மை எல்லோருக்கும் வாய்ப்பது அரிது. அது பேராசிரியர் சு.விக்கு வாய்த்திருந்தது. தமக்கு எதிரானவர்களை, தமக்கு உவப்பில்லாதவர்களைத் துணைவேந்தர் சு.வி. என்றும் பழிவாங்கியதில்லை. இன்னும் உதவிகளையே செய்வார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தர். அவர் “முதலாவது“ துணைவேந்தர்தான்.

இவர் மிகச் சிறந்த நிர்வாகியாக விளங்கினார். பரமேஸ்வராவின் பௌதிக வளத்தைப் பல் கலைக்கழகப் பௌதிக வளாகத்திற்கு உயர்த்தினார். புதிய துறைகளை, கற்கை நெறிகளை உருவாக்கினார். புதிய பீடங்கள் உருவாக அத்திவாரம் இட்டுச் சென்றார். இன்று புகழ்பெற்ற பீடமாக உயர்ந்து நிற்கும் மருத்துவ பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இவர் அளித்த நன்கொடையெனலாம். யுத்தச் சூழலிலும் கல்வி நடவடிக்கைகள் நின்றுவிட இடங் கொடுக்கவில்லை. இலங்கைப் படை, இந்தியப் படை, தமிழர் படை எல்லாவற்றின் இடையூறுகளையும் கடந்து பல்கலைக்கழகம் தொடர்ந்து நடைபெறச் செய்தவர். பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பிரச்சினை, அதிகார அச்சுறுத்தல் அனைத்தையும் தாண்டிப் பல்கலைக்கழகம் என்னும் தேரை இழுத்தவர்.

××××××××××××××××××

## பேராசிரியர் கலாநிதி துரை.மனோகரன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்னைக் கவர்ந்த ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிய பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களைப் பற்றி, அவரது நூற்றாண்டு வேளையில் நினைவுகூருவதில் நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன். அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மிகுந்த ஒருவராகவும் மாணவர்களையும் பொதுமக்களையும் அரவணைத்துச் செல்லும் பண்பு கொண்டவராகவும் அவர் விளங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவரிடம் மாணவனாகக் கற்றமையை எனக்குக் கிடைத்த பெரும்பேறாகவே கருதுகிறேன்.

பேராற்றல் மிக்க பேராசான் வித்தியானந்தன் அவர்களின் பன்முகத் தன்மைகள் விதந்து போற்றுதற்கு உரியன. அவரது சுவாரசியம் மிகுந்த பல்கலைக்கழக விரிவுரைகள், பொது மேடைகளில் சிறப்பு வாய்ந்த சொற்பொழிவுகள், பயன் மிக்க அவரது சிறந்த நூல்கள், கட்டுரைகள், ஆராய்ச்சி மாநாட்டு முயற்சிகள், அவரது உயரிய பதிப்பு முயற்சிகள், நாட்டுக் கூத்துக்களை நவீன மேடைக்குக் கொணர்ந்தமை முதலான பலவும் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுக்கொடுத்தன. எப்போதும் தனி ஆளுமை மிக்க பேராசிரியராகவே அவர் திகழ்ந்தார்.

××××××××××××××××××

## பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்

வாழ்க்கையை முற்றுமுழுதாக இரசித்து, ஒவ்வொரு நிமிஷத்தையும் இன்பமாகச் செலவு செய்தார். இது மட்டு மன்றி தம்மைச் சூழ இருந்த மக்களையும் இன்பமாக வாழும்படி ஊக்கு

தொடர்ச்சி▼

தொடர்ச்சி ▲

வித்தவர். நாடகக் கலைஞர், கூத்துக்காரர், அண்ணாவிமார் என்பவர்கள் இவருடைய இனிய நண்பர்கள். அவர்கள் எல்லாரும் பேராசிரியர் வித்தியானந்தனைத் தமது கண்கண்ட தெய்வமாகக் கருதினார்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்திலே வருடந் தோறும் தமிழ்ச் சங்கத்தின் கலை விழா நடைபெறும். அப்போதெல்லாம் இலங்கையின் பல்வேறு இடங்களில் இருந்தும் அண்ணாவிமார் தமது குழுவினருடன் வருவார்கள்.

அவர்களை மிகுந்த அன்போடு உபசரித்து உணவளித்து நாடகங்களை அரங்கேற்றும்படி செய்து வழியனுப்பி வைப்பார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் துணிவும் ஆற்றலும் நிறைந்தவர். புறநானூற்றுப் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள் என்பவற்றைக் கற்பிக்கும் போது தமிழ் உணர்வு பீறிட்டுப்பாயும். பேராதனையில் எவருக்கும் அஞ்சாத தமிழ் மறவனாக உலாவி வந்தார். தமிழ்ப்பற்று, நகைச்சுவை, இரசனை நாட்டம் என்பவற்றைத் தமது வாழ்வினால் போதித்துக் காட்டியவர்.

பேராசிரியர் வித்தியானந்தனிடம் சமயக் காழ்ப்பு என்பது சிறிதளவேனும் இருக்க வில்லை. இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் அரவணைத்துக் கொண்டு தமது கல்விப்பயணத்தைத் தொடர்ந்தார். இஸ்லாமியருடைய தமிழ் தொண்டு பற்றி அரிய நூல் ஒன்றை எழுதி, ஆக்கியோன் பெயர் என்று தமது பெயரைக் குறிப்பிடாமல் "பிறையன்பன்" என்றே குறிப்பிட்டார். மிஷனரிமாரைப் பற்றி எழுதும் போது பல வழிகளிலும் கட்டுக் கிடையாக இருந்த தமிழ் இலக்கியத்தில் உயிர்த் துடிப்புள்ள உரைநடையைக் கொண்டு வந்தவர்கள் மிஷனரிமாரே என்று எழுதினார்.

××××××××××××××××××

## பேராசிரியர் கலாநிதி கா. குகபாலன்

பேராசிரியர் சு.வி சைவசமய பாரம்பரிய குடும்பத்திலிருந்து வந்தவர். பேராதனை பல்கலைக் கழக தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக இருந்த காலத்தில் அவ்வளாகத்தில் குறிஞ்சிக்குமரன் ஆலய கட்டுமானம் இவரது மேற்பார்வையில் நடைபெற்றது. நாள் தோறும் கட்டட வேலைகளை மேற்பார்வையிடச் செல்வார். இவர் சமூகத்துடன் நெருங்கிப்பழகியவரென்பதால் கட்டுமானப் பணிக்கு தாராளமாக நிதியுதவி கிடைத்தது. ஆலயம் முழுமைபெற்று கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

பேராசிரியர் ஒரு தூய சைவராக இருந்த போதிலும் இன, மத பேதம் பாராது சகல இனத்தவர்களுடனும் மிகவும் நெருங்கிப் பழகியது மட்டுமல்லாது அவர்களால் விரும்பிப் போற்றப்படும் ஒருவராகவும் இருந்துள்ளார். குறிப்பாக, இஸ்லாமியர் மீது அதீத அன்பு கொண்டு அவர்களின் கல்வி, ஆய்வு முயற்சிகளுக்குப் பெரும் பங்கு கொண்டு பல அறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் தமிழ் மாணவர்களின் குறிப்பாக எப்பீட மாணவர்களாயினும் சரி அவர்கள் நலன்களில் மிக அக்கறையுடன் செயற்பட்டு அவர்களை தந்தை என்ற ஸ்தானத்திலிருந்து வழிப்படுத்தி சமூகத்திற்கு அளித்த பெருமையும் பேராசிரியரையே சாரும். குறிப்பாக, இருப்பிடமற்ற மாணவர்களுக்கு இருப்பிடங்களைத் தேடிக்கொடுத்துள்ளதை என் போன்றவர்கள் நேரில் அனுபவித்த நிகழ்வுகளாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகறிந்த கல்விமான், உலகத்தமிழர்களை ஒன்றிணைத்தவர், பிற மொழியாளர்களுக்குத் தமிழின் பெருமையை உணர்த்தியவர். கிராமிய கலை வடிவங்களுக்கு புத்துயிர் கொடுத்தவர். தமிழ்த்தேசியத்தில் பற்றுக் கொண்டவர்.விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான தூர இடைவெளியைப் போக்கியவர். நிறைவான நிர்வாகத்தை வழங்கியவர்.

××××××××××××××××××

## பேராசிரியர் கலாநிதி கி. விசாகரூபன்

இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்குத் தனியான ஓர் இடம் இருக்கின்றது. இலக்கியத் தென்றல்(1953), தமிழர் சால்பு (1954) கலையும் பண்பும் (1961 – இந் நூல் பிறையன்பன் என்ற பெயரில் வெளிவந்தது), தமிழியற் சிந்தனைகள் (1971) ஆகிய திறனாய்வு நூல்கள் வித்தியானந்தனால் எழுதப்பட்டன. இந்த நூல்கள் தமிழ் இலக்கியத்தின் சால்பினையும், தமிழர், முஸ்லிம்களின் சால்பினையும் எடுத்துரைக்கும் உரைகற்களாக விளங்கின என்றால் மிகையில்லை.

நாட்டார் பாடல்கள், நாட்டுக்கூத்துகள் என்பவற்றை மீள் உருவாக்கம் செய்ததில் பேராசிரியரின் பங்களிப்பு முக்கியமானது. இதனோடு இணைந்து பதிப்புப் பணியிலும் முக்கியமான பங்களிப்பை வழங்கினார். இவற்றுக்குச் சமதையாக உயர்கல்வி ஆய்விலும் ஈடுபட்டு சர்வதேச அளவில் நன்கு அறியப்பட்ட ஒரு தமிழ்ப் பேராசிரியராக சு. வித்தியானந்தன் அவர்கள் விளங்கினார்.

இருபத்தாறு வயதில் கலாநிதிப் பட்டத்தை இலண்டனில் நிறைவு செய்த பேராசிரியர், தமிழ்ப் பேராசிரியராய், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் பணிப்பொறுப்பேற்றுப் புகழ்பெற்றார். இவ்வாறான பின்புலங்களைக்கொண்ட பேராசிரியரை ஆய்வுலகில் நிலைநிறுத்திய ஓர் ஆய்வுநிலை எழுத்தாகவுள்ள சங்க இலக்கிய ஆய்வுகளின் மடைமாற்றியாகவும் அமைந்தது இவருடைய "தமிழர் சால்பு" என்ற நூலாகும்.

××××××××××××××××××

## பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்

தமிழ் மக்களின் அரசியலோடு பயணித்த புலமைசார் ஆளுமைகளில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனித்துவமான அறிஞராகத் திகழ்ந்துள்ளார். தமிழ்ப் பேராசிரியராக இலங்கைத் தீவில் அடையாளப் படுத்தப்பட்டாலும் வடக்கு கிழக்கு முழுவதும் நாடகம், கூத்து எனும் தமிழின மரபுகளால் இனங்காணப்படும் அறிஞராகக் காணப்படுகின்றார்.

வித்தியானந்தனின் தனித்துவமான அம்சங்களில் ஒன்றாக நாடகமும் கூத்து மரபும் காணப்பட்டது. அவருடைய அரசியல் பக்கங்களை அது முதன்மைப்படுத்தா விட்டாலும் அவருடைய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அரசியல் பிரக்ஞையாக அல்லது ஈழத்தமிழருடைய அரசியல் அபிலாசைகளை முழுமைப் படுத்துவதில் ஒரு வெற்றிகரமான சூழலை ஈழத்தமிழர் அரசியல் பரப்பில் ஏற்படுத்தி இருந்தது. வடக்கு, கிழக்கு முழுவதும் அவர் கலைத் துறையோடு கொண்டிருந்த ஈடுபாட்டினால் அதிகமான மரபு சார்ந்து இருக்கக் கூடிய நாடகங்களையும் அந்த நாடகங்களுக்கு ஊடாக எழுந்து வரக்கூடிய மரபு சார்ந்த படைப்புக்களையும் அதேபோன்று கூத்து மரபுகளையும் முழுமைப் படுத்துகின்ற விதத்தில் அவருடைய

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

நடவடிக்கைகள் அமைந்திருந்தன. குறிப்பாக அவர் ஈழத்தமிழருடைய அரசியல் ரீதியான தேசிய எழுச்சிக்கான ஓர் அடிப்படையை மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் என்ற இடங்களில் தன்னுடைய கலை ரீதியான வெளிப்பாடுகளுக்கு ஊடாக முதன்மைப் படுத்தியிருந்தார். பிரதேசங்களைக் கடந்தும், சாதி, மதப் பிரிவுகளைக் கடந்தும், மொழி வேறுபாடுகளைக் கடந்தும் ஈழத் தமிழர்களுடைய அரசியல் இருப்போடு முதன்மைப்படக்கூடிய தேசிய அரவணைப்புக்குரிய எண்ணத்தை விதைத்திருந்தார்.

இவை அனைத்துமே கிராமங்கள் தோறும் அடிமட்ட மக்கள்தோறும் சாமானியன் மட்டத்திலும் ஒரு புத்துணர்ச்சியையும் தன்னுடைய உழைப்பின் தனித்துவத்தையும் அடையாளப்படுத்துகின்ற விதத்தில் முதன்மைப்படுத்தப்பட்டது. குறிப்பாக அவர் முதன்மைப்படுத்திய நடிகர் வைரமுத்துவின் அரிச்சந்திரா மயான காண்டம் பெருமளவிற்கு வடக்கு, கிழக்கு முழுவதும் ஒரு மிகப் பரவலான எழுச்சியைத் தோற்றுவித்தது.

வித்தியானந்தனுடைய கலை சார்ந்திருக்கக்கூடிய பணிகளின் உழைப்பின் ஒன்றிணைப் புத்தான் பின்வந்த காலப்பகுதியில் ஈழத் தமிழர்களுடைய அரசியலில் தனித்துவமான தேசிய இருப்பை கட்டமைப்பதற்கான ஓர் அடிப்படையைக் கொடுத்திருந்தது. குறிப்பாக அவர் மரபுகள் சார்ந்து முதன்மைப்படுத்துகின்ற போது மதங்களைச் சேர்ந்தவர்களை, புலவர்களை, விவசாயிகளை அதேபோன்று ஏனைய தொழிலாளர்களை ஒன்றிணைப்பதிலும் அவருக்கான ஒரு தனித்துவம் காணப்பட்டது.

ஆகவே வித்தியானந்தனின் தனித்துவமான பக்கங்கள் ஒவ்வொன்றும் அல்லது வித்தியானந்தனுடைய இருப்பின் ஒவ்வொன்றும் ஒரு முழுமைப்படுத்தப்பட்ட அரசியல் இருப்பை ஈழத் தமிழர்கள் மத்தியிலோ அல்லது இலங்கை தேசியத்தின் மத்தியிலோ அடையாளப்படுத்துவதில் தவறவில்லை.

××××××××××××××××××

## கதிர் பாலசுந்தரம்

புகழ்மிகு புதுமை அறிஞராய், மாணவர் புகழ் பாடும் பேராசிரியராய், நாடகக் கலைஞராய், ஆர்வம் நிறைந்த ஆராய்ச்சியாளராய், பல்கலைக் கழகத் துணை வேந்தராய் அறியப்பட்ட வரலாறு தூக்கிப் பேசும் மகாமேதை கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் ஈழத்தின் தமிழ் இலக்கியப் பரப்பில் ஈடிணையற்ற நட்சத்திரம்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் பேராதனைக் காலம் அவரின் பொற்காலம். அவரின் சிரேஷ்ட பேராசிரியர்களாக புகழ்மிக்க பேரறிஞர்களான சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம் ஆகியோர் இருந்தனர். அவர்கள் இளைஞரான வித்தியானந்தன் அவர்களின் புலமை மற்றும் அர்ப்பணிப்புக் கண்டு வாழ்த்தி ஊக்கமளித்தனர்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் மகிழ்ச்சி சொட்டும் கற்பித்தலினாலும் மாணவர்களுடன் இவர் கொண்டிருந்த நெருங்கிய நட்புறவினாலும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முடிக்குரிய இளவரசனாகவே இவர் பார்க்கப்பட்டார்.

××××××××××××××××××

## முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ்

பேரா.வித்தியானந்தன் அவர்களை ஓர் அறிஞராக, கலைஞராக, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் பாதுகாவலனாக, பல அறிஞர்களை உருவாக்கிய பேராசானாக, சமூக சேவகனாக, ஈழத்து நாட்டார் கலைப் பாதுகாவலனாக இன்னும் எண்ணிறந்த பெருமைகளைச் சுமந்திருந்த இந்தப் பேராளுமை பற்றி இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டியவை ஏராளம்.

அவரது சாதனைகள் அனைத்திற்கும் அவர் மாணவர்களுடன் கொண்ட நெருங்கிய தொடர்பே முக்கிய காரணமாகும்.

தான், தான் என்று தன்னை முன்னிலைப்படுத்தும் அல்லது தான் உண்டு தன் வேலை உண்டு என்று ஒதுங்கிக் கொள்ளும் பிரபலங்கள் மத்தியில், தமிழ் மாணவர்களைக் கல்வியோடு மாத்திரம் அல்லாமல் சிறந்த தமிழ் அன்பர்களாக, நாட்டின் உயர் பிரதிநிதிகளாக ஆக்கியதில் அவர் பங்கு பெரியது.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் செயலாண்மைத் திறன்மிக்கவர். இவரது செயலாண்மைத் திறனுக்கு இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமும் அதன் நடவடிக்கைகளும் களங்களாக அமைந்தன.

××××××××××××××××××

## ஞானம் லெம்பட்

பெருமையும் சிறப்புமிக்க நாடகக் (கூத்து) கலையைத் தமிழ் நல்லுலகுக்குக் கொண்டு வந்ததில் பேராசிரியர் வித்தியானந்தனின் பங்கு மிகப் பெரியது.

இக்கிராமியக் கலைமீது கொண்ட காதலால் பாமரமக்களின் உணர்வுகளைத் தாங்கும் நாட்டார் பாடல்களை ஒன்றுதிரட்டி மட்டக்களப்பு நாட்டுப் பாடலை 1960-ஆம் ஆண்டும் மன்னார் நாட்டுப் பாடலை 1964 ஆம் ஆண்டும் அச்சிட்டு வெளியிட்டார்.

தமிழ்ப் பேசும் மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் முக்கியமான நாட்டார் பாடல்கள், கூத்துகள் என்பன கிராமமக்களுக்கே சொந்தமானவை. நகர மக்கள் வேறுபட்ட பண்பாடுள்ளவர்கள் என்ற வேறுபாட்டை உடைத்து, அது கிராமமக்களுக்கு மட்டும் உரியதல்ல, மாறாக அது தமிழ் மக்களின் முதுசம் என்றதொரு வரைவிலக்கணத்தை ஏற்படுத்தித் தமிழ்ப் பேசும் மக்களை ஒரு பண்பாட்டினுள் கட்டிவைத்தவர்.

பேராசிரியர் வித்தியானந்தனின் நாட்டார் பாடல்கள், கூத்துகள் ஆகியவற்றின் ஆய்வும் செயற்பாடுகளும் தமிழ்ப் பண்பாட்டில் ஒரு மீளுருவாக்கத்தை ஏற்படுத்தின.

கிராமங்கள் தோறும் இரண்டு அல்லது மூன்று இரவுகள் ஆடப்பட்டு வந்த கூத்துகளை நகரத்தார் கண்டுகளிக்கவும் அதில் நாட்டம் கொள்ளவும் அவற்றை ஒன்று, ஒன்றரை மணித்தியால அளிக்கைகள் ஆக்கினார். அத்துடன், நகரத்தாரைக் கவரும் வண்ணம் ஒப்பனை, மேடை அலங்காரம், ஒளி அமைப்பு என்பவற்றிலும் மாற்றங்களைப் புகுத்தி கூத்துகளுக்குப் புத்துருவம் கொடுத்தார். இதற்கான உருவாக்கச் செயற்பாடுகளைப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டே 1962 ஆம் ஆண்டு கர்ணன் போர், 1964 இல் நொண்டி நாடகம், 1965இல் இராவணேசன், 1968 இல் வாலிவதை ஆகிய நாடகங்களை மேடையேற்றித் தொடக்கி வைத்தார்.

××××××××××××××××××

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**திரு. வன்னியகுலம்**

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியராக மட்டுமன்றி தமிழ் பண்பாட்டியலின் ஒரு திருப்புமுனையாகவும் விளங்கினார். தமிழ்ப் பண்பாட்டியலின் மூலவிசையான இயல், இசை, நாடகம் போன்ற துறைகளுக்குப் புதுரத்தம் பாய்ச்சினார். தமிழ் அரசியல் வரலாற்றில் புதியதோர் உத்வேகத்தை உருவாக்கினார். பல்கலைக்கழகங்களைத் தனியே கல்வி வழங்கும் நிறுவனமாக மட்டுமன்றி நவீனமான தோர் மானுடவியலைக் கட்டமைக்கும் பேரரங்காகவும் மாற்றியமைத்தார்.

தமிழ் ஆய்வுப் புலத்திலே தேசிய ஆய்வுக் கோட்பாட்டினையும் விதேசிய ஆய்வுக் கோட்பாட்டினையும் ஒருங்கிணைக்கும் மையப்புள்ளியாகவும் பேராசிரியர் வித்தியானந்தன் விளங்கினார். அதுபோல் பண்டைய தமிழ் இலக்கியங்களையும் நவீன தமிழ் இலக்கியங்களையும் இணைத்து ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் புதிய ஆய்வுத் தடத்தினையும் ஆரம்பித்து வைத்தார்.

பேராசிரியரின் ஆராய்ச்சி வழிவந்த சேவைகளை இலங்கை வித்தியோதய மற்றும் வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களும் தமிழ் நாட்டின் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் மலேசியா பல்கலைக்கழகம் ஆகியன பெற்று தமிழியல் ஆய்வுக்குப் பெரும்பங்காற்றியுள்ளன.

கிராமங்களிலே கட்டுண்டு கிடந்த "கூத்தாடிகள்" என இழித்துரைக்கப்பட்ட நடிகர்களையும் அண்ணாவிமார்களையும் தேசிய மட்டத்தில் மிளிரச்செய்த கைங்கரியத்தைப் பேராசிரியர் முன்னெடுத்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி.வி. வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம், கிருஸ்ணாழ்வார், மட்டக்களப்பைச் சேர்ந்த வந்தாறுமூலை க. செல்லையா அண்ணாவியார், கமுதாவளை பி. தங்கராசா அண்ணாவியார், முல்லைத்தீவு வே. சுப்பிரமணியம் அண்ணாவியார், மன்னார் நானாட்டானைச் சேர்ந்த பெஞ்சமின் செல்வம் ஆகியோர் பேராசிரியரின் முயற்சியால் தேசிய மட்டத்தில் பிரகாசித்த நாட்டுக் கூத்துக் கலைஞர்களாவர்.

நடிகமணி வி.வி வைரமுத்துவின் "அரிச்சந்திர மயான காண்டம்" நாடகம் இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட பெருமை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கே உரியதாகும்.

××××××××××××××××××

**திருமதி விமலா பாலசுந்தரம் எம்.ஏ.**

தமிழ் உலகறிந்த தமிழ்ப் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் பேரறிஞராகவும் ஆய்வாளராகவும் மாணவர் விரும்பும் சிறந்த ஆசானாகவும் செயல்திறன் மிக்க நிர்வாகியாகவும் சமூக – சமய – பண்பாட்டு உணர்வாளராகவும் பல்கலைக் கழகங்க ளிலும் தமிழர் சமுதாயத்திலும் நன்கு போற்றப்படுபவராகவும் விளங்கியவர்.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே துணைவேந்தரென முழுநிலை நியமனம் பெற்ற முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமைக்குரியவராக பேராசிரியர் வித்தியானந்தன் போற்றப்படுகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணி புரிந்த காலங்களிலும் துணைவேந்தராகப் பணியேற்ற பின்பும் மாணவரிடையே தமிழ் உணர்ச்சியை வளர்ப்பதை அவர் தனது சேவையாகக் கொண்டு வாழ்ந்தார்.

மாணவர் நலன்கருதி அவர் மேற்கொண்ட பணிகளில் அவரது கற்பித்தல் திறமையும் கற்பிப்பதில் அவர் கையாண்ட உத்திகளும் மிகவும் விதந்து கூறத்தக்கவை. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்தில் பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு பாடமாகப் பயிலாத மாணவர் பலர், அவரது கற்பித்தல் ஆற்றலாற் கவரப்பட்டு, அவரது பொதுக் கலைத் தமிழ் வகுப்புகளுக்குச் சென்று அவரது வகுப்புக்களிற் கலந்து கொள்ளும் வழக்கம் இருந்தது.

மாணவர்கள் தாம் கற்கும் காலத்தில் அவர்களது ஆளுமை வளர்ச்சியிலும் கல்வி கற்ற பின்னர் அவர்களது முன்னேற்றத்திலும் தொடர்ந்து அக்கறை காட்டும் ஆசிரியர்கள் மிகச் சிலரே யாவர். இவ்வகையிற் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலியோரின் முன்னேற்றத்திலும் அவர் பேருதவியாக இருந்தார் என்பதும் உண்மையான சான்றாகும்.

××××××××××××××××××

**சின்னையா பத்மநாதன்**

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களை நான் இரு வேறு வழிகளில் அறிந்து கொள்ள முடிந்திருந்தது. அவரைக் குருவாகக் கொண்டு, அவர்தம் நல்ல பண்பு நிறை இயல்புகளால் ஈர்ப்புக்குள்ளாகி, அவரிடம் பல்கலைக்கழகத்தில் பாடம் கேட்டுக் கொள்ளக் கிடைத்த குரு சிஷ்ய அனுபவம்.

இரண்டாவதாக, பேராசிரியரது இளைய சகோதரர் திரு.சு.குணநிதி மூலம், அவர் குடும்பத்தினருடனும் பேராசிரியருடனும் கிடைத்த அறிமுகமும் அனுபவமும். திரு.சு.குணநிதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் எனது சகபாடி. இருவரும் ஒரே வகுப்பில் தரம் ஏழில் இருந்து பல்கலைக் கழகம்வரை ஒன்றாகக் கற்றோம்.

எதைச் செய்தாலும் அதைத் தொடங்குவதற்கு முன்னர் திட்டம் இருக்க வேண்டும் என்று நண்பர் குணநிதி எனக்கு நட்பு ரீதியாகக் கூறுவார். அதற்குத் திருக்குறளையும் துணையாகக் கூறிக் கொள்வார்.

"எண்ணித் துணிக கருமம்...." எனும் குறளைக் கூறி. அங்கே வள்ளுவர் "எண்ணித் துணிக" எனும் பொழுது ஒவ்வொரு கருமத்திலும் திட்டமிடலின் அவசியத்தைத்தான் ஆழ்ந்த பொருளில் வலியுறுத்துகின்றார். திட்டமிட்டுக் கருமம் ஆற்றின் எவ்வித இறுக்கமான கருமத்தையும் இலகுவில் ஆற்றிவிட முடியும். எனவே திட்டம் அவசியம் என்று வலியுறுத்துவார்.

பேராசிரியர் தனது உயரிய திட்டமிடலாலேதான் செயற்கரிய பல காரியங்களை ஆற்றி தமிழ் கூறு நல்லுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். தமிழர் பாரம்பரிய நாட்டார் கலைகளுக்கு அவரளித்த உருமலர்ச்சிக்கும் நாட்டுக் கூத்துக்களின் புத்துரு வாக்கத்திற்கும் அவரளித்த தன்னிகரில்லாத பங்களிப்புக்கு உள்ளே அவரது திட்டமிடல் எவ்வாறு உதவியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் அவரால் தலைமை ஏற்று நடந்தேறிய நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசாலும் அருகிருந்தோராலும் ஏற்பட்ட தடைகளை உடைத்தெறிந்து அதனை ஒரு மக்கள் எழுச்சி விழாவாக்கியமைக்கு அடிநாதமாக அவரது திட்டமிடலே நின்று துணை புரிந்திருக்கும் என்பதை நான் இங்கு கூறி வைக்க வேண்டுமோ?

பேராசிரியர் வித்தியானந்தனிடமும் நண்பர்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

குணநிதியிடமும் நான் கண்ட மற்றுமோர் சிறப்பு, வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தால் அவர்களுடன் அன்பு ததும்ப உரையாடி, அவர்கள் திரும்பும் போது வாயில் வரை வந்து வழியனுப்பி வைப்பார்கள்.

××××××××××××××××××

**செ. அழகரெத்தினம்**

பல்கலைக்கழக வாழ்வில் வித்தி அவர்கள் தனது மாணவர்கள், பணியாளர்கள் சக கல்வி சார் உத்தியோகத்தர்களுடன் மிகச் சரளமாக, புரிந்துணர்வுடன், அன்பாக, பண்புசார் நட்புறவுடன் நடந்த மனப்பாங்கும் மனித நேயப் போக்கும் கொண்டவராக விளங்கினார். அவரின் பல்கலைக்கழக வாழ்வு குறித்த மாணவர்களுடன் தொடர்ந்து நல்ல உறவுகளை வித்தி அவர்கள் பேணி வந்தார். தனது ஆலோசனைகள், கருத்துக்களை அவர்களுடன் வெளிப்படையாகப் பரிமாறிக் கொள்வதில் பின்நின்றதே இல்லை. தம்மாலான உதவிகளை வழங்க எப்போதும் தயாராகவே இருந்தவர். குறிப்பாக, என்னைப் போன்ற தமது பழைய மாணவர்களைத் தம் ஆலோசனைகளைச் சமயோசிதமாக வழங்குவதில் சிறந்த நிலைப்பாடு கொண்டவர்.

பல்வேறு கல்விசார் செயற்பாடுகள் நிகழ்வுகளில் இடையறா தொடர்புகளைப் பேணி வந்தவர். இவர் மிக எளிமையான வாழ்க்கை முறைகளை எல்லோருடனும் கொண்டாடி நல்லுறவுகளைத் தக்க வைத்துக் கொண்டவர். இவர் போன்ற நல்ல கல்விமானை பண்புடன் பணிவான ஆளுமை படைத்த அறிஞரைத் தமிழ் உலகம் இழந்தமை மிகவும் துர்ப்பாக்கியமானது.

××××××××××××××××××




# திருகோணமலை நகரில் நாய்களுக்கு கருத்தடை

**(ஹஸ்பர் ஏ.ஹலீம்)**

கிழக்கு மாகாண கால் நடை சுகாதாரத் திணைக்களமும் திருகோணமலை நகரசபையும் இணைந்து திருகோணமலை நகரில் கட்டாக்காலியாக திரியும் நாய்களின் பொருக்கக்கை கட்டுப்படுத்தும் முகமாக நாய்களுக்குக் கருத்தடை செயற்பாடு நேற்று முன் தினம் திருகோணமலை நகரில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாணகால் நடைசுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர், திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ.இராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 11.05.2024

## மேஷம்

இன்று மனதில் பதற்றங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.

## ரிஷபம்

இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலை களை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்ட மிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணை யுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமான வருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

## மிதுனம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இருவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதட்டம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேர லாம்.

## சிம்மம்

இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்ய மாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.

## கன்னி

இன்று மிதமான வளர்ச்சி காணப் படும். பொறுமையும் உறுதியும் இருந் தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல் லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.

## துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறு வதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய் வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக் கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிச மான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.05.2024




இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம். புதியகட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும். இதனால் பணம் செலவு செய்ய நேரும்.







# இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் டாக்டர் கெங்கம்மா நினைவு விடுதி திறப்பு

126 வருடம் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் புகழ்பெற்ற மகப்பேற்று வைத்தியர் டாக்டர் கெங்கம்மா அவர்களின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, மருத்துவ, சத்திர சிகிச்சை விடுதிகள் நேற்றுக் காலை திறந்தது வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு சிறுவர்கள்,குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் பா.சயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

இக் கட்டடத் தொகுதி வைத்திய நிபுணர் பா.சயந்தன் மற்றும் அவரது பாரியார் கிருபாளினி ஆகியோரின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், சத்திரசிகிச்சை பேராசிரியர் வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக மகப்பேற்று வைத்திய நிபுணர்களான ஜெ.கஜேந்திரன், என்.சரவணபவ, வை.சிவாகரன், ஆர்.துவாரதீபன் ஆகியோரும், விஷேட அதிதியாக இலங்கை நிர்வாக சேவையின் உயரதிகாரி பொ.பிறேமினியும் கலந்து சிறப்பித்தினர்.












# சிவில் பாதுகாப்பு படையில் உயிரிழந்த, அங்கவீனமுற்ற வீரர்களுக்கான கொடுப்பனவு 55 வயதுக்குப் பின்னரும்!

யுத்தத்தின் போது உயிரிழந்த மற்றும் முற்றாக அங்கவீனமடைந்த சிவில் பாதுகாப்பு படை வீரர்களுக்கு 55 வயது பூர்த்தியான பின்னர் நிறுத்தப்படும் சம்பளத்தை தொடர்ந்தும் வழங்குவது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விசேட கவனம் செலுத்தி வருகிறார் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

யுத்தத்தின் போது உயிரிழந்த சிவில் பாதுகாப்புப் படை வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு மற்றும் யுத்தத்தினால் முற்றாக அங்கவீனமடைந்த சிவில் பாதுகாப்புப் படை வீரர்களுக்கு 55 வயது வரை சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 55 வயதின் பின்னர் அவர்களுக்கு சம்பளமோ ஓய்வூதிய கொடுப்பனவோ வழங்கப்படாததினால் அவர்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து, அவ்வாறான சிவில் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிறுத்தப்படும் கொடுப்பனவை மேலும் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். அத்துடன் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சிவில் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் பியன்வில ஆகிய தரப்பினர் இது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை
# இன்று காலை 6 மணிக்கு ஆரம்பம்

**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய ஆடிவேல் விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய – இலங்கையின் மிக நீண்ட – பாதயாத்திரை இன்று 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஜெயா வேல்சாமி தலைமையில் ஆரம்பமாகிறது.

செல்வச்சந்நிதி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சாரங்கன் குருக்களின் விஷேட பூஜை காலை 6 மணிக்கு இடம்பெறும்.

சாரங்கன் குருக்கள் பிரதான வேலை பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயா வேல்சாமியிடம் வழங்கி வழியனுப்பி வைக்கவிருக்கிறார்.

அதனையடுத்து மோகன் சுவாமிகளின் காலை ஆகார மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

பாதயாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி அடைந்துள்ளன எனவும் சுமார் 60 யாத்திரீகர்கள் இணைந்து கொள்கின்றனர் எனவும் பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

இன்று சனிக்கிழமை பகல் ஆவரங்கால் சென்று, இரவு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் தங்குவார்கள்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய ஏழு மாவட்டங்களையும் இணைத்து 55 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிகநீண்ட தூர பாத யாத்திரையாகக் கருதப்படுகின்றது.

சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 23 ஆவது வருடமாக இப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.